Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

பொதுசன நூலகம்
06 OCT 2004




# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -15 . திருவள்ளுவர் ஆண்டு- 2035 புரட்டாதி-20 06-10-2004 புதன்கிழமை ஓசை -231

## தமிழர் தாயகமெங்கும் பன்னிரு வேங்கைகளின் 17ஆவது நிறைவ நாள் உணர்வு பூர்வமாக அனுஷ்டிப்பு!

இந்திய - சிறிலங்கா கூட்டுச் சதிக்கு பலியாகிய லெப்.கேணல் புலேந்திரன், லெப்.கேணல் குமரப்பா உட்பட பன்னிரு வேங் கைகளின் 17 ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் நேற்று தமிழர் தாயகப்பகுதியெங்கும் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக் கப்பட்டது.

பன்னிரு வேங்கைகளின் 17ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு வல்வெல்டித்துறை தீருவில் பகுதியிலுள்ள நினைவுத் தூபி யில் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டது.

முன்னதாக மாலை 5 மணியள வில் பன்னிரு வேங்கைகளின் திருவுருவப்படத்தை கடற்புலிப் பெண் போராளிகள் தாங்கிவர வேங்கைகளின் உறவினர்கள் "பாண்ட்" வாத்திய மற்றும் தவில் நாதஸ்வர இசையுடன் ஊர்வல மாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

திருவுருவப்படங்கள் தீருவில் நினைவுத் தூபியில் அஞ்சலிக் காக வைக்கப்பட்டதை அடுத்து வடமராட்சி மாவீரர் துயிலுமில்லப் பொறுப்பாளர் வே. தமிழரசன் தலைமையில் நிகழ்வு ஆரம்ப மானது.

இதில் பொதுச்சுடரை மாவீ ரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகம், கடற்புலிகளின் யாழ்-மாவட்டப் பொறுப்பாளர் அருணன், கடற்புலிகளின் வடம ராட்சிக் கோட்ட அரசியல்துறைப் பணிமனைப் பொறுப்பாளர் கல்யாணி, யாழ்.மாவட்ட துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் செம்மணன், தென்மராட்சிக்கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சிவநாத், தமிழ்த் தேசியக்கூட்ட மைப்பு பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோர்

(12 ஆம் பக்கம் பார்க்க)



தீருவிலில்நடைபெற்ற நிகழ்வில்

## சனாதிபதி தரப்பில் பேச்சுவார்த்தை மேசைக்கு வருவதற்கான ஆக்க பூர்வ முன்னெடுப்பில்லை!

### அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்

**பேச்சளவில் சமாதானப் பேச்சுக்களை முன்னெடுக்க வேண்டும் என்கின்ற அறிக்கைகள் வெளியிடப்படுகின்றனவே தவிர பேச்சுவார்த்தை மேசைக்கு வருவதற் கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் சனாதிபதியின் தரப்பிலிருந்தோ அல்லது அரசாங்கத் தரப்பிலிருந்தோ முன்னெடுக்கப்படவில்லை என அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்துள்ளார்.**

அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமை யில் ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள விடு தலைப்புலிகளின் அரசியல் குழு வினர் ஜெனீவாவில் நோர்வே பிரதிநிதிகளுடனான கலந்துரை யாடலின் பின்னர் பி.பி.ஸியின் தமிழோசைக்கு வழங்கிய செவ்வி யிலேயே அரசியல்துறைப் பொறுப் பாளர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்; சனாதிபதி அவர்கள் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதில்

(12 ஆம் பக்கம் பார்க்க)

### தமிழீழ பெண்கள் எழுச்சிநாள்

2ஆம் லெப்ரினனட் மாலதி யின் 17ஆம்ஆண்டு நினைவு நாளையும் தமிழீழப் பெண்கள் எழுச்சி நாளையும் முன்னிட்டு இன்று முதல் ஐந்து நாட்களுக்கு கிளி நொச்சி மத்திய விளை யாட்டு மைதானத்தில் பல்வேறு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.(விபரம் 4ஆம் பக்கத்தில்)




## ஐ.சி.ஆர்.சி,மனித உரிமைகள் குழு அரசியல் விவகாரக்குழு சந்திப்பு!



தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் தலைமையிலான அரசியல் விவ காரக்குழுவினருக்கும் ஆசிய பசு பிக் பிராந்தியத்திற்கான சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி களுக்கும் இடையிலான கலந்துரை யாடல் நேற்று சுவிற் சர்லாந்தில் நடைபெற்றது. இதன் போது பல் வேறு விடயங்கள், மனித உரிமை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## எரிகாயங்களுக்கு உள்ளான சிறுமி நேற்றுப் பரிதாப மரணம்

(யாழ்ப்பாணம்)

எரிகாயங்களுக்குள்ளான நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட சிறுமி ஒருவர் சிகிச்சைகள் பயனளிக் காத நிலையில் நேற்று நண்பகல் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார் . கிளிநொச்சி வட்டக்கச்சியைச்சேர்ந்த திவாகரன் ஜெனனி (வயது-06) என்பவரேஇவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

கடந்த 3ஆம் திகதி வட்டக்கச்சியில் குப்பி விளக்கால் ஏற்பட்ட தீ விபத்தில் பிரஸ்தாப சிறுமி பலத்த தீக்காயங்களுக்குள்ளானார்.

இதனையடுத்து கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பிரஸ்தாப சிறுமி மேலதிக சிகிச்சைக்காக நேற்றுமுன்தினம் யாழ் போதானா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பயனாளிக்காததன் காரணமாக நேற்று உயிரிழந்துள்ளதாக தெரிவிக் கப்படுகிறது.

(33)

## சர்வதேச ஆசிரியர் தினத்தை முன்னிட்டு இன்று பல் வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு

சர்வதேச ஆசிரியர் தினத்தை சிறப்புற அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகள் அனைத் தும் செய்யப்பட்டுள்ளது. இதன் போது ஆசிரியர்கள் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு கௌரவிப்பு நிகழ்வுகள் நடை பெறவுள்ளன.

சர்வதேச ஆசிரியர் தினமாகிய இன்று தமிழர் புனர்வாழ்வுக்கழகமும், வடக்கு-கிழக்கு மாகாண முன்பள்ளி கல்வி மேம் பாட்டு நிலையமும் இணைந்து முன்பள் ளிக் கல்விக் கண்காட்சியையும், முன்பள்ளி ஆசிரியர்களைக் கௌரவிக்கும் நிகழ்வை யும் நடாத்துகின்றனர்.

அம்பாறை மாவட்ட வெஸ்ளிக் கல்லூரி யில் நேற்று முன்தினம் தொடக்கம் கண் காட்சி நடைபெற்று வருகின்றது. அத்துடன் இன்று மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங் களைச் சேர்ந்த இரண்டாயிரம் முன்பள்ளி ஆசிரியர்கள் கௌரவிக்கப்படுகின்றனர்.

வடக்குக் கிழக்கு மாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர் ஜெயா தம்பையா வின் தலைமையில் இந்திகழ்வு இடம் பெறும். இதேபோன்றுஏனைய மாவட்டங்களிலும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## லெப்.கேணல் நிரோஜன் நினைவு நாளும் "அலைபாடும் பரணி" ஒலிநாடா வெளியீடும்

கடற்புலிகளின் துணைத் தளபதி லெப்.கேணல் நிரோஜன் மற்றும் அவருடன் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட மாவீரர்களின் 5ஆம் ஆண்டு நினைவு தின நிகழ்வும், கடற்புலிகளின் ஆதர வில் உருவாக்கப்பட்ட அலைபாடும பரணி ஒலி நாடாவினது வெளி யீட்டு நிகழ்வும் நாளை மாலை 7.00 மணிக்கு முல்லைத்தீவு மகா வித்தியாலய மைதானத்

(12 ஆம் பக்கம் பார்க்க)



# அரசாங்க கேள்வி அறிவித்தல்

**நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் மீளிணக்கத்துக்கான அமைச்சினால் யாழ்.மாவட்டத்திற்கு நிவாரணத்திற்கு வழங்கப்படும் நாட்டரிசி(புழுங்கல்) வழங்கலுக்கான**

## கேள்வி கோரல்

01 யாழ். மாவட்டத்தில் இலவச நிவாரணம் பெறும் குடும்பங்களுக்கான 2004 யூன், யூலை, ஒகஸ்ட் மாதங்களுக்கான நிவாரணம் வழங்குவதற்குத் தேவையான அரிசியை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களிலுள்ள பதிவு செய்யப்பட்ட ப. நோ. கூ. சங்கங்களிடமிருந்து கீழ்க்குறிப்பிடப்பட்ட ப. நோ. கூ. சங்கங்களுக்கென கீழ் தரப்பட்டுள்ள அளவுகளில் நேரடியாக விநியோகிப்பதற்கான கேள்விகள் மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிடம் (வரைவுள்ளது) இருந்து கோரப்படுகின்றன. ஒவ்வொரு ப. நோ. கூ. சங்கத்திற்கும் வழங்கீடு செய்யப்பட வேண்டிய தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளதுடன், இவைகளில் அளவு மாற்றங்கள் ஏற்படுமிடத்து அவை பின்னர் அறிவிக்கப்படும்.

| இல | ப. நோ. கூ. சங்கம் | அரிசியின் அளவு | | |
|---|---|---|---|---|
| | | யூன் (MT) | யூலை (MT) | ஒகஸ்ட் (MT) |
| 01 | சாவகச்சேரி | 190 | 190 | 190 |
| 02 | கைதடி | 70 | 70 | 70 |
| 03 | கொடிகாமம் | 135 | 135 | 135 |
| 04 | உடுப்பிட்டி | 32 | 32 | 32 |
| 05 | கட்டைவேலி–நெல்லியடி | 45 | 45 | 45 |
| 06 | பருத்தித்துறை | 114 | 114 | 114 |
| 07 | புலோலி | 27 | 27 | 27 |
| 08 | மருதங்கேணி | 80 | 80 | 80 |
| 09 | யாழ்ப்பாணம் | 311 | 311 | 311 |
| 10 | நல்லூர் | 161 | 161 | 161 |
| 11 | அச்சுவேலி | 154 | 154 | 154 |
| 12 | நீர்வேலி | 115 | 115 | 115 |
| 13 | மானிப்பாய் | 131 | 131 | 131 |
| 14 | பண்டத்தரிப்பு | 90 | 90 | 90 |
| 15 | அளவெட்டி–மல்லாகம் | 64 | 64 | 64 |
| 16 | தெல்லிப்பளை | 150 | 150 | 150 |
| 17 | சங்கானை | 183 | 183 | 183 |
| 18 | சுன்னாகம் | 196 | 196 | 196 |
| 19 | புங்குடுதீவு–நயினாதீவு | 40 | 40 | 40 |
| 20 | வேலணை | 45 | 45 | 45 |
| 21 | ஊர்காவற்றுறை | 70 | 70 | 70 |
| 22 | காரைநகர் | 55 | 55 | 55 |
| 23 | தீவகம் | 12 | 12 | 12 |
| 24 | நெடுந்தீவு | 30 | 30 | 30 |
| மொத்தம் | | 2500 | 2500 | 2500 |

02. கேள்விகளைச் சமர்ப்பிக்க விரும்பும் ப.நோ.கூ.சங்கங்கள் மீளளிக்க முடியாத கேள்வி வைப்பாக ரூபா 500/= யை யாழ். மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலகத்தில் செலுத்தி கேள்விப் படிவங்களையும், கேள்வி ஆவணங்களையும் 2004.10.06 ஆம்திகதி தொடக்கம் 2004.10.21 ஆம் வரையிலான காலப்பகுதியில் அலவலக நாட்களில் முற்பகல் 10.00 மணி தொடக்கம் பிற்பகல் 3.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். இவ் வசதிகள் கிளிநொச்சி, முல்லைத்தீவு,வவுனியா, மன்னார் மாவட்ட ப.நோ.கூ.சங்கங்களைப் பொறுத்தவரையில் அந்தந்த மாவட்ட அரசாங்க அதிபரினுடைய அலுவலகத்தில் செய்யப்பட்டுள்ளன.

03. மீளளிக்க முடியாத கேள்வி வைப்புக்களாக ரூபா 500/= யை அந்தந்த மாவட்ட செயலகத்தில் செலுத்தி அரசாங்க அதிபரிடமிருந்து கேள்விப் படிவங்களையும், கேள்வி ஆவணங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

04. கேள்வி கோரப்படவுள்ள அரிசி, நாட்டரிசியாக (புழுங்கல்) இருத்தல் வேண்டும் என்பதுடன் அவை கேள்வி பற்றிய ஆவணத்தில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளைக் கொண்டிருத்தல் கட்டாயமானதாகும்.

05. பூரணப்படுத்திய இரு கேள்விப் படிவங்களை தலைவர், மாவட்ட கேள்விச் சபை, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் (அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்) என முகவரியிடப்பட்ட நீளத்தபால் உறையில் நேரடியாகவோ/தபால்மூலமாகவோ யாழ்.செயலக மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலக (கணக்காளரது) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2004.10.22 பி.ப.2.00 மணிக்கு முன்பாக சேர்த்தல் வேண்டும். அன்றைய தினம் பி.ப.3.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அப்பொழுது கேள்வ' காரர் அல்லது அவரது எழுத்து மூலமான அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி சமுகமளிக்க முடியும்.

06. கேள்விப் பத்திரத்தின் தபால் உறையில் இடது பக்க மேல் மூலையில் "நாட்டுப்புழுங்கல் அரிசி வழங்குவதற்கான கேள்வி" என எழுதப்படல் வேண்டும்.

07. கேள்வி காரர்கள் (Bidders) குறிப்பிடப்பட்ட ப.நோ.கூ.சங்கங்களில் ஒன்றுக்கு அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவைக்கு தமது கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்கும் அச்சங்கங்களுக்கு விநியோகிப்பதற்கான வெவ்வேறான விலைகளை குறிப்பிடுவதற்கும் அருகதையுடையவர்களாவர். ஒவ்வொரு ப.நோ.கூ.சங்கத்திற்கும் விநியோகிக்கப்படவேண்டிய அரிசியின் தொகை வெவ்வேறான கேள்விகளாக கருதப்படும்.

08. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்வி காரர் ஒப்பந்தத்தின் பெறுமதியில் 10% மீளளிக்கப்படக்கூடிய வைப்பாக செயல்படுத்தல் முறிக்காக (Performance Bond) செலுத்தி ஒப்பந்தம் செய்து கொள்ளல் வேண்டும்.

09. கேள்விகள் பரிசீலனை செய்யப்படும்பொழுது சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளின் விநியோகத்திற்கான விலை மாவட்ட விலை நிர்ணய சபையினால் நிர்ணயிக்கப்பட்ட விலையிலும் அதிகமாக இருத்தல் கூடாது. மாவட்ட விலை நிர்ணயம் செய்யப்படும்பொழுது விநியோக விலை சந்தை விலையிலும் பார்க்க எக்காரணம் கொண்டும் அதிகமாக இருக்க மாட்டாது.

10. கேள்வி விண்ணப்ப இறுதித் திகதியிலிருந்து கேள்விகள் 30 நாட்களுக்குள் வலுவுடையதாக இருக்கும்.

செ.பத்மநாதன்,
தலைவர்/அரச அதிபர்,
மாவட்ட கேள்விச்சபை,
மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.

(சி.10256)

# ஆசிரியர் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற எழுத்தாக்கத்திறன் போட்டி முடிவுகள்

(அலுவலகச் செய்தியாளர்)

கிளிநொச்சி வலையக்கல்விப் பணிமனையில் தமிழ் மொழிப்பிரிவு உலக ஆசிரியர் தினம் 2004 ஐ முன்னிட்டு கிளி.மாவட்ட பாடசாலை மட்டத்தில் நடாத்தப் பெற்ற எழுத்தாக்கப்போட்டியின் கட்டுரை, கவிதை, சிறுகதை போட்டிகளில் வெற்றி பெற்றோரின் பெயர் விபரங்கள் வெளிவந்துள்ளன.

இவர்களுக்கான பரிசில்கள் இன்று நடைபெறும் ஆசிரியர் தின நிகழ்வில் வழங்கி கௌரவிக்கப் படவுள்ளனரென கிளி.வலயக் கல்விப்பணிப்பாளர் ப.அரியரத்தினம் தெரிவித்துள்ளார்.

பரிசு பெற்றோர்பேர் விபரம் கீழ்வருமாறு;

கட்டுரை:-திருமதி மீ.இதய சிவதாஸ் கிளி/உருத்திரபுரம் ம.வி, முதலாம்இடம், செல்வி அ.அருளாம்பிகை கிளி/மத்தியகல்லூரி இரண்டாம் இடம், திருமதி.செ. இராஜரட்ணம்,கிளி. தர்மபுரம் ம.வி மூன்றாம்இடம்.

கவிதை:-திரு.சி.விசுவாசம் கிளி. பூநகரி ம.வி முதலாம்இடம், திருமதி. ஜீ.விவேகானந்தராசா கிளி/ வட்டக்கச்சி ம.வி இரண்டாமிடம், செல்வி.பா.வசந்தகுமாரி கிளி/ அக்கராயன் அ.த.க.பாடசாலை மூன்றாம் இடம்.

சிறுகதை:-திருமதி. த.அரசரத்தினம் கிளி.புனித அந்தோனியார் றோ.கவித்தியாலையம் முதலாம் இடம், திருமதி.ப. வைரமுத்து கிளி/ தர்மபுரம் ம.வி இரண்டாம் இடம், திரு.அரவிந்தன் கிளி/தர்மபுரம் மவி மூன்றாம் இடம், திருமதி. ச.அரிய நாயகம் கிளி. பிரமந்தனாறு ம.வி மூன்றாம் இடம். (சோ)

## உலக ஆசிரியர் தினம் ஒக்டோபர் -06 2004

கல்லூரிகள் கல்லுளிகள்
செயற்பாடுகள் ஒன்றேதான்
சிற்பியின் கை கல்லுளிகள்
சிற்பத்தைச் செதுக்கிடுமே
நல்லாசான்கள் நிறை கல்லூரிகள்
நற்சமூகத்தைப் படைத்திடுமே
ஆசிரிய உள்ளம் அறிவின் ஊற்று
பொங்கிப் பிரவாகித்தால்
அகிலமே சோதிமயம்
சிந்தனையின் பிறப்பிடம்
சிறப்பிடமாய் அமைந்திட
கடமையே கண்ணாக
சேவையே நோக்காக
வருங்கால சந்ததியை
வனப்புடன் வனைந்திடுவோம்
பணிகள் சிறக்க
பன்னீரால் வாழ்த்துகின்றோம்.

கல்விச் சமூகம்,
கிளி/முருகானந்தா மகாவித்தியாலயம்,
முரசுமோட்டை

(சி.10559)

## தவறிவிட்டது

வரணி வடக்கு, வரணியைச் சொந்த முகவரியாகக் கொண்ட திருமதி விசாலாட்சி சின்னையா ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (கவருடன்) பளைச் சோதனைச் சாவடியினுள் தவறி விட்டது. அடையாள அட்டை இல 478322860V. இதனைக் கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் கிளிநொச்சிப் பணிமனையில் ஒப்படைக்கவும். (சி.10554)

## விற்பனைக்கு

வவுனியா பூந்தோட்டப் பகுதியில் நான்கு பரப்புக் கொண்ட மேட்டுத் துண்டுக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு
024 4589416
077 6321271
077 6145316 (சி.10419)

## பதவி வெற்றிடங்கள்

கீழ்க்காணும் பதவிகளுக்கு உடனடி வேலை வாய்ப்புக்கள் உண்டு.

1) கள உத்தியோகத்தர்
2) கணனி இயக்குனர்
3) தொழில்நுட்ப உத்தியோகத்தர்
4) தையல் பயிற்றுவிப்பாளர்
5) உணவு பதனிடல் பயிற்றுவிப்பாளர்
6) கைவேலை பயிற்றுவிப்பாளர்
7) வெதுப்பக உற்பத்தி பயிற்றுவிப்பாளர்
8) திரை அச்சுக்கலை பயிற்றுவிப்பாளர்
9) விவசாய, கால்நடை வளர்ப்பு பயிற்றுவிப்பாளர்

08. 10. 2004 அன்று மு. ப. 9. 00 – 5. 00 பி. ப. மணிவரை நேரில் சான்றிதழ்களுடன் சமூகந்தரவும்.

சிறுவர் கல்விக்கும் பால்நிலை அபிவிருத்திக்குமான நிறுவனம்

மூளாய்,சுழிபுரம்.
T.P : No. 060 - 2213293

(சி.10253)

## துயர் பகிர்கின்றோம்

வற்றாப்பளை கண்ணகையம்மன் ஆலய அன்னதான சபையின் தலைவராக நீண்டகாலம் அரும்பணியாற்றியவரும் எமது ஆலயத்தின பொங்கல் உற்சவ காலங்களில் முழு நேர தொண்டராக செயற்பட்டவருமான **அருணாசலம்– கோவிந்தசாமி** அவர்கள் 01. 10. 2004 இல் இறையடி சேர்ந்தமையிட்டு ஆழ்ந்த துயரில் மூழ்கியிருக்கும் அன்னாரது குடும்பத்தின் துயரில் நாமும் பங்கு கொள்வதுடன் அன்னாரின் ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

வற்றாப்பளை கண்ணகையம்மன்
ஆலய பரிபாலன சபை.

(சி.10560)

## 4ஆம் ஆண்டு நினைவலைகள்



**லெப்.கதிரெழிலன்**

அந்தோனிப்பிள்ளை இலங்கரூபன்
தபால்கந்தோர் அருகாமை, மல்லாவி.

தோற்றம்: 03.08.1981
வீரச்சாவு: 06.10.2000

சம்பவம்: அரியாலைப்பகுதியில் நேரடி மோதலின்போது வீரச்சாவு

உங்கள் நினைவுடன்
தாய், தந்தை, சகோதரர்கள், நண்பர்கள்.

தபால்கந்தோர் அருகாமை,
மல்லாவி.

(சி.10557)

## விமானமூலம் விரைவுசேவை

சுவிஸிலே வாழும் உங்கள் அன்பு உறவுகளுக்கு வேண்டிய - விருப்பமான உணவு வகைகள் - உடுப்பு வகைகள் - அன்றாட பாவனைப் பொருட்கள் என்பவற்றை உடனடியாகப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக விமானமூலம் அனுப்பி வைக்க முடியும்.
யாழ். குடாநாட்டில் ஒப்படைக்கப்படும் பொருட்கள் மூன்று நாள்களில் சுவிஸில் விநியோகிக்கப்படும்.

தொடர்புகளுக்கு : M.நிசாந்தன்
T.P: 0777-323192

(சி.10254)

# பலூஜாவில் அமெ.போர் விமானங்கள் தாக்குதல்
# பெண்கள்த சிறுவர்கள் உட்பட ஒன்பது பேர் பலி

(பாக்தாத்)

**ஈராக் தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பலூஜாநகரில் அமெரிக்கப போர் விமானங்கள் விடிகாலையில் குண்டுவீசித்தாக்கின. இதில் 9பேர் பலி யாகியுள்ளனர்.**

பலூஜா நகருக்கு வெளியே யுள்ள ஒருகட்டடத்தில் 25 தீவிரவாதிகள் ஆயுதங்களைக் கொண்டு சென்ற போது,அந்த கட்டடத்தின் மீது போர்விமானங்கள் குண்டு வீசின. இறந்த 9பேரில் 3பேர் பெண்கள். 2பேர் சிறுவர்கள் ஆவார்கள்.

இந்தத் தாக்குதலில் அந்தக் கட்டடம் முழுவதும் இடிந்து விழுந்தது. கடந்த ஒருவாரமாக அமெரிக்க இராணுவம் இந்த நகரின் மீது விமானம் மூலம் குண்டு வீசித் தாக்குதல் நடத்தி வருகின்றது.



பாக்தாத்துக்கு 100 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள காம்ப்லீமா என்ற இடத்தில் உலங்குவானூர்திக்கருகில் காவலில் இருக்கும் போலந்து படைவீரர். (போலந்து ஈராக்கில் தங்கியிருக்கும் அதன் 2500 துருப்பினரையும் மீளப்பெற உத்தேசித்திருப்பது தெரிந்ததே)



அவுஸ்திரேலியாவில் தஞ்சமடைந்துள்ள ஈராக்கிய அகதிகளுக்கான விசா வழங்குவதில் கன்சவேடிவ் அரசாங்கம் கடும் போக்கை கடைப்பிடிப்பதற்கு எதிராக கிட்னி நகரில் ஆர்ப்பாட்டம் நடத்தும் அதிருப்தியாளர்கள்.

# பாக்தாத்தில் பணயக்கைதிகளாக இரு இந்தோனேசியப் பெண்கள்

(ஜகார்தா)

ஈராக்கில் வேலை பார்த்த இரு இந் தோனேசியப்பெண்களை ஈராக் தீவிரவாதிகள் பணயக்கைதிகளாகப் பிடித்துள்ளனர் அவர்களை விடுவிக்க வேண்டுமானால் இந்தோனே சியாவில் உள்ள தீவிரவாத இயக்கமான ஜெமா இஸ்லாமியாவின் தலைவரான அபுபக்கர் பஷீர் சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட வேண்டும என்று நிபந்தனை விதித்தது.

இதை ஏற்று பஷீரை விடுதலை செய்ய இந்தோனேசிய அரசு மறுத்து விட்டது இது குறித்து இந்தோனேசிய அரசு வக்கில் கூறுகையில்,இது இந்தோனேசிய சட்டம் தொடர்பான விவகாரம். இதில் அன்னிய சத்திகள் தலையிட அனுமதிக்க மாட்டோம் என்று கூறினார்.

பஷீரே தீவிரவாதிகளின் கோரிக்கையை ஏற்க மறுத்து விட்டார் இஸ்லாமியபோராளிகள் பெண்களை கடத்தினார்கள் என்பதை என்னால் நம்ப முடிய வில்லை. இதை என்னால் ஏற்றுக்கொள்ள முடிய வில்லை. இஸ்லாமிய நெறிகளுக்கு எதிரானது அமெரிக்காவின் தூண்டுதலின் பேரில் இது நடந்து இருக்கலாம் என்று பஷீர் கூறியதாக அவரது வக்கில் அகமது மிச்டன் கூறினார்.

# சட்டவிரோதமாக இத்தாலிக்குள் புகமுயன்ற 64 பேர் படகு கவிழ்ந்து டுனீஷியக் கடலில் பலி

(டுனிஸ்)

சட்டவிரோதமான முறையில் இத்தாலிக்குள் புக முயன்ற 64 பேர் டுனிஷிய கடலில் படகு கவிழ்ந்து உயிரிழந்துள்ளனர்.மொரோக்கோ நாட்டைச் சேர்ந்த 70 பேரும் டுனீஷிய நாட்டைச்சேர்ந்த ஐந்து பேரும் சட்டவிரோதமான முறையில் இத்தாலிக்குள் செல்வதற்காக டுனீஷியாவில் இருந்து படகு ஒன்றில் புறப்பட்டனர்.நடுவழியில் இவர்கள் சென்ற படகு கவிழ்ந்தது. இதன் போது 64 பேர் கடலில் மூழ்கி இறந்துள்ளனர். ஏனைய 11 பேரை டுனிஷியக் கடலோர காவல் படையினர் மீட்டுள்ளனர்.

# லண்டனில் காப்புறுதி நிறுவனத்தை ஏமாற்ற முற்பட்ட இந்தியப் பிரஜைக்கு பதினைந்து மாதச் சிறைத்தண்டனை

(லண்டன்)

ரூபா.2கோடி காப்புறுதித் தொகையைப் பெறுவதற்காக இறந்ததாக நாடகமாடிய இந்தியருக்கு லண்டன் நீதிமன்றம் 15மாதம் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்புக் கூறியது. இந்தியாவைச் சேர்ந்த பிரித்பால் கைலா (வயது -45) மனைவி கரம்ஜித், மகனுடன் இங்கி லாந்து தலைநகர் லண்டனில் வசித்து வந்தார்

பிரித்பால் கைலா 3காப்புறுதிக் கம்பனிகளில் 1994ஆம் ஆண்டு காப்புறுதி செய்திருந்தார். இந்த நிலையில் இந்தியாவுக்கு வந்த பிரித்பால் கைலாதான் இறந்து விட்டது போல நாடகமாடி இதற்காக ரூபா 20ஆயிரம் இலஞ்சங்கொடுத்துப் போலியான இறப்புச் சான்றிதழ் ஒன்றை வாங்கினார். பின்னா தான் மாரடைப்பால் இறந்து விட்டதாகவும் இறுதிச் சடங்குகள் முடிந்து விட்டதாகவும் இந்தியாவிலுள்ள தனது நண்பர் ஒருவர் மூலம லண்டனில் உள்ள தனது மனைவி கரம்ஜித்துக்கு தொலைபேசிமூலம் பிரித்பால் தகவல் தெரிவிக்கச் சொன்னார். அதன்படி அந்த நண்பரும லண்டனுக்குத் தகவல் தெரிவித்தார். பின்னா 'பிரித்பாலின் இறப்புச் சான்றிதழும் லண்டனில் உள்ள அவரது மனைவிக்கு அனுப்பி வைக்கப்பட்டது . பின்னர் அவர் தனது கணவர் பெயரில் 3காப்புறுதி கம்பனிகளில் காப்புறுதி செய்திருந்த தொகையை பெற முயன் றார். அதில் குறைந்த தொகை கொண்ட 2கம்பனிகள் பிரித்பால் இறந்து விட்டதாகக் கருதி தொகை யைக் கொடுத்து விட்டன. ஆனால் பிரித்பால் கைலா சுமார் 2கோடி ரூபா காப்புறுதி செய்திருந்த கம்பனிக்கு அவரது சாவின்மீது சந்தேகம் ஏற்பட்டது.

இதைத் தொடர்ந்து அந்தக் கம்பனி விசாரணைக்காக தனது ஏஜெண்டுகளை இந்தியாவுக்கு அனுப்பி வைத்தது. இந்தியா வந்த அவர்கள் பிரித்பால் கைலா உயிருடன் இருப்பதைக்கண்டு பிடித்தனர். உடனே இது பற்றி லண்டனுக்கு அவர்கள் தகவல் தெரிவித்தனர். இதைத் தொடர்ந்து அந்தக் காப்புறுதி நிறுவனம் வழக் குத் தொடர்ந்தது. விசாரணையின் போது நீதிமன்றில் ஆஜரான பிரித்பால்கைலா குற்றத் தையும் ஒப்புக் கொண்டார்.

வழக்கை விசாரித்த நீதிபதி அவருக்கு 15மாதம் சிறைத் தண்டனை விதித்துத்தீர்ப்புக் கூறினார். இதற்கிடையே இந்த வழக்கு விசாரணையில் இருந்தபோதே பிரித்பால் கைலாவின் மனைவி கரம்ஜித் தனது கணவர் இறந்து விட்டதாகக் கூறி மற்றைய 2காப்புறுதி கம்பனிகளிடம் இருந்து தான் பெற்ற தொகையைத் திருப்பிச் செலுத்தி விட்டார். தனது வீட்டை விற்று அவர் இந்தத் தொகையை செலுத்தியத் தியதாகத் தெரிகிறது.

# தஜிகிஸ்தானில் இந்தியா விமானப்படைத்தளம் அமைப்பு
# தமது இறையாண்மைக்கு எதிரானதென்கிறது பாகிஸ்தான்

இந்தியாவுக்கு வெளியே முதன் முறையாக தஜிகிஸ்தானில் விமானப்படைத்தளம் ஒன்றை இந்தியா அமைத்து வருகிறது. இந்த ஆண்டு இறுதிக்குள் இந்த விமானப் படைத்தளம் செயற்படத் தொடங்கும் என இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

முன்பு அமெரிக்காவுக்கும், சோவியத் யூனியனுக்கும் இடையே பனிப்போர் நடந்த போது தமது ஆதரவு நாடுகளில் இராணுவத் தளங்களை அமைக்க இரு நாடுகளுமே போட்டிப் போட்டன. ஆனால் சோவியத் யூனியன் சிதறி விட்டதால் அமெரிக்கா மட்டும் இந்த விடயத்தில் தனது ஆதிக்கத்தைத் தொடர்ந்து செலுத்தி வருகின்றது. ஆனால் இந்தியாவைப் பொறுத்த வரையில் எந்தவொரு வெளிநாட்டிலும் இதுவரை இராணுவத்தளம் அமைக்க வில்லை. முதன்முறையாக இந்தியாவுக்கு வெளியே தமது இராணுவத்தளம் அமைக்கப் பட்டு வருகிறது. தஜிகிஸ்தான் தலைநகர் துஷான்பேயில் இருந்து 10 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள பார்ஹோரில் தான் இந்திய விமானப்படைத் தளம் அமைக்கப் பட்டு வருகிறது. விமானங்கள் வந்து இறங்க வசதியாக ஓடுதளம் விமானப் படைக்குத் தேவையான கட்டமைப்புக்கள் வசதிகள் அனைத்தும் ஏற்படுததபபட்டுள்ளது. கூடவே ஒரு மருத்துவமனையும் அமைக்கப் பட்டுள்ளது. பணிகள் அனைத்தும் முடியும் தறுவாயில் உள்ளன. இந்த ஆண்டு இறுதிக்குள் இந்த விமானப்படைத்தளம் செயற்படத் தொடங்கும் கடந்த 2002ஆம் ஆண்டு அப்போதைய பிரதமர் வாஜ்பாய தஜிகிஸ்தான் பயணம் மேற் கொண்டார்.அப்போது இரு நாடுகளும் இராணுவ ஒத்து ழைப்பு அளிப்பது என்று முடிவு செய்தன. அதன்படி இரு நாடுகளின் பாதுகாப்புக்கு ஒருவருக்கு ஒருவர் பரஸ்பரம் ஒத்துழைப்பு அளிப்பது என்று முடிவு செய்யப்பட்டது. எனவே தஜிகிஸ்தானில் பாதுகாப்புக்கு உதவும வண்ணம் அங்கு இந்திய விமானப் படைத்தளம் அமைக்க முடிவு செய்யப்பட்டது. அந்த அடிப் படையில் தான் இந்திய விமானத் தளம் இங்கு அமைக்கப்பட்டுள்ளது. 'முழுக்க முழுக்க தஜிகிஸ்தான் பாதுகாப்புக்கு உதவும் வண்ணம் இந்த விமானப்படைத் தளம் அமைக்கப் பட்டுள்ளது' என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. ஆனாலும் தஜிகிஸ்தானில் இந்திய விமானப்படைத்தளம் அமைக்கப் பட்டுள்ளது. பாகிஸ்தானை அச்சுறுத்துவதற்கென ஆய்வாளர் கள் தெரிவிக்கின்றனர். இதேவேளை இதற்குப் பாகிஸ்தான் கவலை தெரிவித்துள்ளது. 'பாகிஸ்தானுக்கு மிக அருகில் தஜிகிஸ்தான் உள் ளது எனவே இங்கு இந்திய விமானப் படைத்தளம் அமைந்தால் இந்திய விமானங்கள்' சில நிமிடங்களில் பாகிஸ்தான் மீது தாக்குதல் நடத்த ஏதுவாகும். எனவே இந்தியப்பிராந்தியத்தில் இந்திய இராணுவத் தளம் அமைப்பது பாகிஸ்தானின் இறையாண்மைக்கு எதிரானது. என்று பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சகம் கூறியுள்ளது. பாகிஸ் தானுக்கு அப்பால் பல ஆசிய நாடுகளில் இந்தியாவுக்கு நல்லுறவு உள்ளது. எனவே மற்ற நாடுகளுடன் நல்லுறவைப் பேணக் கூடாது என்றோ, இராணுவ ஒத்துழைப்பை ஏற்படுத்தக்கூடாது என்றோ பாகிஸ்தான் கூறமுடியாது. எனவே தஜிகிஸ்தானில் அமைந்து வரும் இந்திய விமானப்படைத் தளத்தைக் கண்டு பாகிஸ்தான் கவலைப்படத் தேவையில்லை' என்று இந்திய வெளியுறவு அமைச்சகமும் பதிலடிக் கொடுத்திருக்கிறது.

# வளரும் நாடுகளுக்கு அதிக அதிகாரம் உலக வங்கிக் கூட்டத்தில் ஆட்சேபம்

வோஷிங்டன் கொள்கை முடிவுகள் எடுப்பதில் வளரும் நாடுகளுககு அதிக அதிகாரம் அளிப்பது தொடர்பாக உலக வங்கி மற்றும் ஐ.எம்.எப் வருடாந்திர ஆலோ சனைக் கூட்டத்தில் ஒருமித்த கருத்து எட்டப் படவில்லை. இதனால் முடிவு எதுவும் எடுக்காமல் கூட்டம் முடிவடைந்தது. ஐ.எம்.எப் நிர்வாக இயக்குனர் ராட்ரிக்கோ மற்றும் உலக வங்கித் தலைவர் ஜெம்ஸ் உல்பன்சன் ஆகியோர் கலந்து கொண்ட மூன்று நாள ஆலோசனைக் கூட்டம் வோஷிங்டன் நகரில் நடந்தது. வறுமையை ஒழிக்க வளரும் நாடுகளுக்கு அதிக நிதியுதவி அளிப்பது மற்றும் கொள்கை முடிவுகள் எடுப்பதில் வளரும் நாடுகளுக்கு அதிக அதிகாரம் அளிப்பது போன்றவை பற்றிக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. ஆனால் இது தொடர்பாக ஒருமித்த கருத்துக்கள் எட்டப்படவில்லை.

இரண்டு நாள் நடந்த ஆலோசனைக் கூட்டத்திற்கு பின்னர் நிருபர்களிடம் பேசிய ராட்ரிக்கோ மற்றும் உல்பன்சன் ஆகியோர் கூறுகையில், "வளரும் நாடுகள் தொடர்பான மூன்று முக்கிய பிரச்சனைகள் குறித்து விவாதிக்கப் பட்டது. இதில் ஒருமித்த கருத்து எட்டப்படவில்லை. முடிவுகள் எடுப்பதில் வளரும் நாடுகளுக்கு அதிக அதிகாரம் அளிப்பதா வேண்டாமா என்பதற்கு போதுமான ஆதரவு கிடைக்க வில்லை. இருந்த போதிலும், இவ்விடயத்தில் தீர்வு காண்பதற்கு அனைத்து வழிகளிலும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும். சிக்கல்கள் நிலவிய போதிலும், உலக வங்கியின் விதிகளைப் பின்பற்றவில்லை எனில் அந்த நாடுகளுக்கு உதவிகள் தரப்பட மாட்டாது," என்றனர். இந்தக் கூட்டத்தில் இந்தியத் தரப்பில்

## சீனா மீது தலாய்லாமா கண்டனம்

சீனா அணுக் கழிவுகளை திபெத்தில கொட்டிவருகின்றது என்று திபெத்புத்தமதத் தலைவர் தலாய் லாமா குற்றம் சாட்டினார். மெக்சிக்கோ நகரத்துக்கு நான்கு நாள் பயணமாக வந்த தலாய் லாமா நிருபர்களிடம் ஞாயிற்றுக் கிழமை கூறியதாவது திபெத்தின் தொலை தூரப்பகுதிகளில் சிதைவுற்ற வடிவத்தில் பறவைகளும், பிறவிக் குறைபாடுகளுடன் இதர விலங் குகளும் காணப்படுவதே இதற்குச்சாட்சி. சீனாவில் மக்கள் நெருக்கமாக வசிப்பதால் அணுக் கழிவுகளைக் கொட்டுவதற்கான இடமாக அது திபெத்தைப்பயன் படுத்துகிறது என்றார்.

# தமிழீழ பெண்கள் எழுச்சிநாளை முன்னிட்டு கிளிநொச்சியில் சிறப்பு நிகழ்வுகளுக்கு ஏற்பாடு!



## -இன்று காலை முதல் ஆரம்பமாகிறது

(அலுவலக செய்தியாளர்)

**தமிழீழ பெண்கள் எழுச்சிநாளும் 2ஆம் லெப். மாலதியின் 17ஆம் ஆண்டு நினைவு நாளும் கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தில் வெகுசிறப்பாகக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.**

கிளி.மத்திய விளையாட்டு மைதானத்தில் இன்று முதல் 10ஆம் திகதிவரை 5நாட்கள் சிறப்பு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. முதல் நாள் நிகழ்வுகள் காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.

இந்நிகழ்வில் தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் மகளிர் படையணிகளின் போரியல் வளர்ச்சியை எடுத்துக்காட்டும் கனரக ஆயுதங்களின் காட்சிகள், மகளிர் படையணிகள் களமுனைகளில் சாதித்த போர் சாகசங்கள் அடங்கிய பல்வேறு சம்பவங்களின் புகைப்பட ஓவியக்காட்சிகள் அடங்கிய கண்காட்சி, விடியல் படைவீடு மாதிரியமைப்பு, தமிழீழத்தின் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள மகளிர் உதைபந்தாட்ட அணிகளுக்கிடையில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் வித்தாகிய முதற்பெண் மாவீரர் 2ஆம் லெப். மாலதி நினைவுக் கேடயத்துக்கான உதைபந்தாட்டப் போட்டிகள் அத்துடன் தமிழீழத்தின் முன்னணி இசைக்கலைஞர்களும், போராளிக் கலைஞர்களும் இணைந்து வழங்குகின்ற இசைநிகழ்வுகள் அடங்கிய சிறப்புக்கலை நிகழ்வுகள், இத்தனைக்கும் மேலாக தமிழீழ விடுதலைப்புலிகளின் ஏனைய முன்னணித்தாக்குதல் அணிகள் கலந்து சிறப்பிக்கும் விசேட நிகழ்வுகள் என்பன இடம் பெறவுள்ளன எனத் தமிழீழ விடுதலைப்புலிகளின் மகளிர் படையணி அறிவித்துள்ளது.(லோ,தீ)



வன்னி தெருவெளிக் கலைஞர்களுக்காக நேற்று முன்தினம் கிளிநொச்சி கொள்கை முன்னெடுப்புப் பிரிவு மண்டபத்தில் நடைபெற்ற நாடகப்பட்டறையில் தமிழ் நாட்டைச்சேர்ந்த நாடகப்பயிற்றுனர் பிரலையன், தப்பு ஆட்டக்காரர் விநாயகம், தமிழீழ கொள்கை முன்னெடுப்புப் பொறுப்பாளர் ரமேஸ், கொள்கை முன்னெடுப்பாளர் செல்வம் மாமா ஆகியோருடன் நாடகக் கலைஞர்களை படத்தில் காணலாம். (படம்:- சோதி)

# மன்னார் வீதியில் பொலிசார் தீவிர பரிசோதனை நடவடிக்கை

(மன்னார்)

வவுனியா-மன்னார் வீதியில் பொலிசார் தீவிர பரிசோதனை நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

மன்னார் பகுதியிலிருந்து தென்னிலங்கைக்குப் பெருமளவு போதைப்பொருள் கடத்தப்படுவதைத் தடுப்பதற்காகவே, இந்நடவடிக்கை எடுக்கப்பட்டு இருப்பதாகப் பொலிசார் தெரிவிக்கின்றனர். இரவு வேளைகளில் மன்னார் வீதியில் போகின்ற அனைத்து வாகனங்களும் விசேட பொலிஸ் பிரிவால் பரிசோதனை செய்யப்பட்டு வருகின்றன.

# முஸ்லிம் இளைஞர் கொல்லப்பட்ட இடத்துக்கு அருகே போதைப் பொருள்!

(மன்னார்)

அண்மையில் ஓலைத்தொடுவாய் கரிசல் வீதியில் வைத்து இனந்தெரியாதவர்களினால் முஸ்லிம் இளைஞர் ஒருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்ட இடத்துக்கு அருகில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை மன்னார் பொலிசார் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட சமயம் 60 இலட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப் பொருளை கைப்பற்றினர்.

இதனையடுத்து இந்த ஹெரோயின் போதைப் பொருள் மன்னார் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டுவரப்பட்டு தற்சமயம் அவை கொழும்பு போதைப்பொருள் தடுப்பு பணியகத்திற்கு எடுத்துச் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (மி)

# தேசவிரோதிகளால் பொலநறுவையில் மூன்று பொதுமக்கள் கடத்தல்

## -இரு ஆயுதங்களும் கண்டெடுப்பு

பொலநறுவை மாவட்டம் கர்பகா கிராமத்தில் 3 பேர் தேச விரோதக் கும்பலினால் கடத்தப்பட்டுள்ளார்கள்.

இவர்களில் ஒருவர் தாக்கப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டுள்ள போதிலும், ஏனையோர் பற்றி இதுவரை எதுவித தகவல்களும் இல்லை. கடந்த வெள்ளிக்கிழமை இரவு வாகனமொன்றில் வந்தவர்களினாலேயே இவர்கள் கடத்தப்பட்டுள்ளார்கள். கணபதிப்பிள்ளை சேனாதிராஜா (46), தர்மலிங்கம் ரஞ்சன் (26) மற்றும் கே.விஜயகுமார் (23) ஆகியோர் கடத்தப்பட்ட போதிலும், விஜயகுமார் என்பவர் மட்டும் விடுவிக்கப்பட்டுள்ளார்.

விடுதலைப்புலிகளுக்கு உதவுவதாகக் குற்றம் சுமத்தப்பட்டு குறிப்பிட்ட நபர்களினால் இவர்கள் கடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. வெலிகந்த பொலிசில் இது பற்றிய புகார்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதேவேளை மட்டகளப்பு - பொலநறுவை மாவட்ட எல்லைப் புறத்திலுள்ள அரலகங்வில காட்டுப்பகுதியில் ரி-56 ரக துப்பாக்கிகள்2 பொலிசாரால் ஞாயிற்றுக்கிழமை மாலை கைவிடப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது பொதுமக்களிடமிருந்து கிடைத்த தகவலின் பேரிலேயே இவை கண்டெடுக்கப்பட்டிருந்ததாக அரலகங்வில பொலிசார் தெரிவித்தனர்.

# வடக்கு-கிழக்கு மாகாண பாடசாலைகளில் அக்-22இல் ஆசிரியர்கள் அடையாள வேலைநிறுத்தம்

## -தமிழர் ஆசிரியர் சங்கம் அறிவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் எதிர் வரும் 22 ஆம் திகதியன்று வட-கிழக்கு மாகாணங்களிலுள்ள சகல பாடசாலைஆசிரியர்களுக்கும் அடையாள தொழிற்சங்க நடவடிக்கையினை மேற்கொள்ள தயாராகுமாறு வேண்டுகை விடுத்துள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

நேற்றுமுன்தினம் கிளிநொச்சி மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொண்ட இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவத்தை எமது செய்தியாளர் தொடர்பு கொண்டபொழுது தெரிவிக்கையில், வடக்கு- கிழக்கு மாகாணங்களில் பணிபுரிந்து வரும் தமிழ் மொழி ஆசிரியர்களுக்கு ஏற்கனவே அரசினால் ஏற்றுக் கொள்ளப் பெற்ற கோரிக்கைகள் நிறைவேற்றப்படாமையின் காரணமாக அவற்றினைக் கண்டிக்கும் முகமாக எதிர்வரும் 22 ஆம் திகதியன்று வடக்கு கிழக்கு மாகாண பாடசாலைகளில் ஒரு நாள் அடையாள சுகயீன விடுப்புப் போராட்டம் மேற்கொள்ளும் வண்ணம் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வட-கிழக்கு மாவட்ட சங்கச் செயலர்களுக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளதாகவும் சங்கச் செயலர் தெரிவித்துள்ளார். (சோ)



புதுக்குடியிருப்பில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்த வண்ணமுள்ளது. வீதிப் போக்குவரத்துக்கு இவை பெரும் இடையூறாகவுள்ளன. புதுக்குடியிருப்பு - முல்லை வீதியில் கட்டாக்காலி நாய் ஒன்று வாகனத்துக்குள் சிக்குண்டு இறந்து கிடப்பதைப் படத்தில் காணலாம். (படம் :- தவரட்ணம்)

# கியுடெக் நிறுவன அனுசரணையில் மாணவத் தலைவர்களுக்கான பயிற்சி

(வட்டக்கச்சி)

கிளிநொச்சியில் கியுடெக் நிறுவனத்தின் அனுசரணையுடன் பாடசாலை மாணவத் தலைவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி வகுப்புக்கள் 01.10.2004-03.10.2004 வரை கியுடெக் நிறுவனத்தில் நடைபெற்றது.

அருட் தந்தை பீற்றர் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் ஐம்பதிற்கு மேற்பட்ட மாணவர்கள் பங்கு பற்றினார்கள்.

இந் நிகழ்விற்கு அருட் சகோதரி- பற்றிமா நாயகி, அருட்தந்தை- சோசை விக்ரர், பணியாளர்கள் நிர்மலா, டிரோனி ஆசிய நாட்டு மனித உரிமை செயலாளர் லுக்சர், யாழ். மனித உரிமை உத்தியோகத்தர் வெ.அமில்டன், அருட்தந்தை- நோனால்டோ ஆகியோரும்; மனித வள மேம்பாட்டு உத்தியோகத்தரும்; உளவியல்துறை உத்தியோகத்தரும் பங்கு கொண்டு நிகழ்வைச் சிறப்பித்தனர்.

மாணவர்களுக்கான இரு நாள் பயிற்சியில் தலைமைத்துவம், முரண்பாடு, உளவியல்,மனித உரிமைகள், என்பன பற்றி எடுத்துக் கூறப்பட்டு திரைப்படம் மூலம் விளக்கங்களும் அளிக்கப்பட்டன.

மாணவர்கள் ஒவ்வொருவரும் தம்மைப் புரிந்து கொள்ளும் வகையில் கலை நிகழ்வுகளும், விளையாட்டுக்களும் நடைபெற்றன. 03 நாள் வகுப்புக்களிலும் கலந்து கொண்ட மாணவர்கள் கியுடெக் நிறுவனக் குழுவில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். இதன் போது அருட் தந்தை பீற்றர் அவர்கள் 2005ஆம் ஆண்டு தை மாதம் மீண்டும் இவ் வகுப்புக்கள் நடைபெறும் என உறுதியளித்தார். (12)

# மரத்தில் தூங்கிய நிலையில் ஆணின் எலும்புக்கூடு முள்ளியவளைக் காட்டுப்பகுதியில் கண்டுபிடிப்பு!

(முள்ளியவளை)

மரத்தில் தூங்கிய நிலையில் ஆணின் எலும்புக்கூடொன்று முள்ளியவளையில் காவல்துறையினரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தண்ணீரூற்று-நெடுங்கேணி வீதியில் 7ஆம் கட்டைக்காட்டுப் பகுதியில் கண்டு பிடிக்கப்பட்ட இவ் எலும்புக்கூடு முள்ளியவளை 3ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சண்முகராசா (வயது55) என்பவருடையது என அடையாளம் காணப்பட்டுள்ளது.

கடந்த யூலை மாதத்தில் இருந்து இவர் காணாமல் போயிருந்ததாகவும், இதையடுத்து இவரது மகன் காவல்பணிமனையில் முறைப்பாடு செய்திருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த மாதம் 29ஆம் திகதி காட்டில் மரத்தில் எலும்புக்கூடு ஒன்று தொங்குவதைப் போராளிகள சிலர் கண்டு, காவல்துறையினருக்கு அறிவித்ததையடுத்து காவல்துறையினர் குறித்த நபரின் மகனையும் அழைத்துச்சென்று அடையாளம் காணவைத்தனர்.

பின்னர் எலும்புக்கூடுவைத்திய பரிசோதனைக்காக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டு, பரிசோதனையின் பின் சென்ற சனிக்கிழமை உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

காவல்துறையினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (20)

# அல்லைப்பிட்டி சோதனைச் சாவடியில் கடற்படையால் இளைஞர், யுவதிகள் தனியாக அழைக்கப்பட்டு விசாரணை

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணம்-அல்லைப்பிட்டி சோதனைச் சாவடியூடாகப் பயணிக்கும் இளம் வயதுடையவர்களை சிறிலங்காக் கடற்படையினர் தனிமையில் அழைத்துச் சென்று விசாரணை நடத்துவதோடு, மிரட்டி அச்சுறுத்தல் விடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர்.**

மேற்படி சோதனைச் சாவடியூடாக தீவகம் செல்லும் இளையோரை அச்சோதனைச்சாவடியிலுள்ள கடற்படையினர் வழமைக்கு மாறாகக் கடும் சோதனைக்குட்படுத்துவதுடன், அவர்களைத் தனிமையாக அழைத்து விசாரணைக் கூண்டுகளுக்குள்ளும், காவலரண்களுக்குள்ளும் அழைத்துச் செல்லும் படையினர் அவர்கள் மீது கடும் விசாரணைகளை மேற்கொள்கின்றனர்.

வழமைக்கு மாறாகக் கடந்த சில தினங்களாகப் படையினர் மேற்கொண்டுவரும் இந் நடவடிக்கைகளால் தீவகப்பகுதிக்குச் செல்ல இளைஞர் மற்றும் யுவதிகள் பெரிதும் அஞ்சுகின்றனர். (33)

## மண்கும்பான் தனியார் காணிகளில் பனைகளைத் தறிக்கும் படையினர்

### - மக்கள் கண்டனம்

யாழ்.தீவகத்தின் மண்கும்பான் பகுதிகளில் உள்ள தனியார் காணிகளிலிருந்து பனைமரங்களைத் தறித்து எடுத்துச்செல்லும் நடவடிக்கைகளில் சிறிலங்கா கடற்படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

மேற்படி பகுதிகளில் உள்ள ஆள் நடமாட்டமற்ற தனியார் காணிகளுள் நுழையும் படையினர் அங்கு நிற்கும் பனைமரங்களைத் தறித்துக் குற்றிகளாக்கி அவற்றை உழவுஇயந்திரங்கள் மூலம் ஏற்றிச்சென்று தமது இராணுவப்பலப்படுத்தல் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவதாக மக்கள் குற்றம் சாட்டுகின்றனர். (33)

## மிருசுவிலில் காணி அலுவலகத்தின் இடம் பெயர் சேவை

தென்மராட்சிப் பகுதியிலுள்ள மிருசுவில் படித்த மகளிர் வீடமைப்புத் திட்டம் மற்றும் மந்துவில் வேலவரைக்காடு வீடமைப்புத் திட்டம் போன்றவற்றுக்கான காணியை முறைப்படி வழங்குவதற்காக இந்த இடம் பெயர்வு சேவை நடைபெற இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

மிருசுவில் படித்த மகளிர் வீடமைப்புத் திட்டத்திற்கான இடம் பெயர் சேவை வரும் 11 ஆம் திகதி எழுதுமட்டுவாள் வடக்கு கிராம உத்தியோகத்தர் அலுவலகத்திலும், மந்துவில் வேலவரைக்காடு வீடமைப்புத் திட்டத்திற்கான இடம்பெயர்சேவை மந்துவில் கிழக்கு கிராம உத்தியோகத்தர் அலுவலகத்தில நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை இடம்பெற இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

வரக்கூடிய பயனாளிகள் ஆவணங்களை எடுத்து வரும் படியும் பணிக்கப்பட்டுள்ளனர். தேசிய அடையாள அட்டை, உலர் உணவு நிவாரண அட்டை, வருமானத்தை உறுதிப்படுத்தும் ஆவணம் தற்போது தங்களிடம் வீடு, காணி இல்லையென்பதை உறுதிப்படுத்தும் கிராம அலுவலரின் கடிதத்துடன் குறிக்கப்பட்ட திகதிகளில் வரும்படி தெரிவிக்கப்படுகிறது. (28)

## இன்று பல்கலைக்கழக தினம்

யாழ்ப்பணப் பல்கலைக்கழக தினம் இன்று புதன்கிழமை துணைவேந்தர் மோகனதாஸ் தலைமையில் பி.ப.2.00 மணியளவில் கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் மங்கல விளக்கேற்றல், அகவணக்கம், தலைமையுரை, வாழ்த்துரை என்பன இடம்பெறவுள்ளன. அத்தோடு பல்கலைக்கழகத்தில் .இருபத்தைந்து வருடசேவையைப் பூர்த்தி செய்து இளைப்பாறிய ஆசிரியர்கள் உத்தியோகத்தர்களுக்கு விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளது. அத்தோடு இராமநாதன் நுண்கலைக்கழக மாணவர்களது கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

## பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்துடன் யாழ். அரசியல்துறைப் பொறுப்பாளர் சந்திப்பு

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையால் ஏற்பாடு செய்யப்பட்ட யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்துடனான சந்திப்பு ஒன்று நேற்று முன்தினம் மதியம் 12 மணியளவில் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவர் பேராசிரியர் சிவநாதன் தலைமையில் இடம்பெற்றது. இச்சந்திப்பில் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை இணைப்பாளர் கண்ணன், ஆசிரியர்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். இக்கலந்துரையாடலில் கருத்து வெளியிட்ட யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, 'இதற்கு முன்னர் இதேபோன்ற சந்திப்புக்கள் இடம்பெற்றன. அவற்றின் ஊடாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட ஆலோசனைகளையும், அபிப்பிராயங்களையும் எமது அரசியல் துறைப் பொறுப்பாளருக்கு எடுத்துக் கூறினோம். அவை எமக்குப் பெரும் துணையாக அமைந்தன. எனவே, இவை போன்ற ஆலோசனைகளையும், அபிப்பிராயங்களையும் பெறுவதற்காக இச் சந்திப்பை மேற்கொள்ளுமாறு எமது அரசியல்துறைப் பொறுப்பாளர் பணித்திருந்தார்' எனக் குறிப்பிட்டார். இச்சந்திப்பில் கருத்துத் தெரிவித்த விரிவுரையாளர் சூசையானந்தன் அரசாங்கம் இச் சமாதான காலப் பகுதியில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதைவிட விடுதலைப்புலிகளை பலவீனப்படுத்த வேண்டும் என்பதில் முனைப்போடு செயற்பட்டு வருகிறது. இக்காலப் பகுதியில் விடுதலைப்புலிகளின் செயற்பாட்டைக் கட்டுப்படுத்தவும், முடக்கவும் முயல்கிறது. உண்மையாக அரசாங்கம் சமாதானத்தை விரும்பினால் இதை செய்யமாட்டாது எனக் குறிப்பிட்டார். இச்சந்திப்பில் விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள் எனப் பலரும் கருத்துத் தெரிவித்தனர். இச்சந்திப்பு சுமார் இரண்டு மணித்தியாலம் இடம் பெற்றது. (33)

## காரைநகர் நீலாவோடையில் மிதிவெடி அபாயம்-மக்கள் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.காரைநகரில் உள்ள நீலாவோடைக் கிராமத்தில் மக்கள் குடியிருப்புக்களை அண்டியுள்ள பகுதிகளில் மிதிவெடிகளின் அபாயம் காணப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேற்படி கிராமத்தில் உள்ள விவசாய நிலங்கள், தனியார் காணிகள் மற்றும் ஒதுக்குப்புறமான இடங்களிலும் மிதிவெடி அபாயம் காணப்படுகின்ற போதும் அவற்றை அகற்றுவதற்குத் துரித நடவடிக்கை எடுக்கப்படாததால் அப்பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர அஞ்சுகின்றனர்.

இதனால் இப்பகுதி மக்களின் மீள்குடியமர்வு பெரிதும் தாமதமடைந்திருப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது. (33)

## மீளக்குடியமர்தல் நிதிவழங்கப்படவில்லை தென்மராட்சி மக்கள் கவலை

போரினால் கடும் அழிவுகளைச சந்தித்த தென்மராட்சிப் பிரதேச மக்கள் மீளக் குடியமர்ந்ததற்குப் பின்னால் அரசினால் வழங்குவதாக உறுதியளித்த ரூபாய் இருபத்தையாயிரம் நிதி இதுவரை வழங்கப்படவில்லை.

தினமும் சாவகச்சேரிப் பிரதேச செயலகத்திற்குப் படையெடுக்கும் பாதிக்கப்பட்ட மக்கள் தங்களது மனக்கவலைகளை அதிகாரிகள் இடத்தில் தெரிவிப்பதும், அவர்களும் தினமும் வரும் மக்களைச் சமாதானம் செய்து அனுப்புவதும் வாடிக்கையாக நிகழ்வதாகத் தெரியவருகிறது.

கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னால் மக்களிடத்தில் நிதி வழங்குவதாக உறுதியளித்து கையெழுத்துப் பெற்றும் இதுவரை இந்த நிதி வழங்கப்படாமல் இருப்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர். கைதடியில் ஆறு கிராம அலுவலர் பிரிவிலும் மற்றும் வரணி, தவசிகுளம், மிருசுவில் போன்ற பகுதி மக்கள் இந்த நிதியைப் பெற முடியாமல் பெரும் இன்னல்களைச் சந்திப்பதாகத் தெரியவருகிறது. அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா? என்பதே மக்களின் கேள்வியாகவுள்ளது. (28)

### - யாழ்.மாவட்ட பெ.அபி.நிறுவனம் -

## போரினால் பாதிக்கப்பட்ட பெண்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் உள்ள போரினால் பாதிக்கப்பட்ட கிராம வாழ்பெண்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டு யாழ். மாவட்ட பெண்கள் அபிவிருத்தி நிறுவனத்தால் சேமிப்புத்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் முதல் தடவையாக சண்டிலிப்பாய், வேலணை, கைதடி, நாவாந்துறை ஆகிய கிராமங்களில் அமுல் செய்யப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் 40 பெண்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்கள் தமது மாதாந்த வருமானத்திலிருந்து 200 ரூபாவினை வங்கியில் வைப்புச்செய்ய அதே அளவு தொகையைத் திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்டுள்ள பெண்களினுடைய வங்கிக்கணக்கிற்கு யாழ். மாவட்ட அபிவிருத்தி நிலையம வழங்குகிறது.

இதன் மூலம் போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசப் பெண்களின் பொருளாதாரத்தினை மேம்படுத்துவதே நோக்கமாகும். (33)

## இளைஞன் வீசிவிட்டுச் சென்ற பொதியினால் போக்குவரத்துத் தடை

யாழ்.நகரையண்டிய முத்திரைச் சந்திப்பகுதியிலுள்ள பற்றைக் காணியொன்றினுள் கண்டுபிடிக்கப்பட்ட அனாமதேயப் பொதியொன்றினால் வீதியூடான போக்குவரத்துக்கள் சுமார் இரண்டு மணி நேரம் தடைப்பட்ட சம்பவமொன்று கடந்த சனி இடம்பெற்றுள்ளது.

அப்பகுதியில் ரோந்து வந்த பொலிசார் இரவு வேளையில் வீதியால் பயணித்துக்கொண்டிருந்த இளைஞன் ஒருவன் மீது சந்தேகங்கொண்டு சோதனைக்குட்படுத்த முற்பட்டுள்ளனர். எனினும் தான் பயணித்த துவிச்சக்கரவண்டியினை நிறுத்த மறுத்த இளைஞன் அங்கிருந்து தப்பித்துச் செல்ல முற்பட்டுள்ளான். எனினும் பொலிசாரும் இளைஞனைத் துரத்தவே தன்னிடமிருந்த பொதியொன்றினை பற்றையினுள் தூக்கி வீசிவிட்டுக் குறித்த இளைஞன் தப்பித்து விட்டான்.

பொதிதொடர்பாக அச்சங்கொண்ட பொலிசார் படையினருக்கும் கண்ணிவெடியகற்றல் பிரிவிற்கும் உடன் தகவல் வழங்கியதுடன், வீதியினூடான போக்குவரத்தையும் தடைசெய்தனர்.

எனினும் இராணுவ கண்ணிவெடியகற்றல் பிரிவினர் பொதியைச் சோதனைக்குள்ளாக்கிய போது வெறும் போலி விளையாட்டுத் துப்பாக்கியொன்றை மட்டுமே இறுதியில் கண்டுபிடித்திருந்தனர். (27)

## கடனுதவி

(யாழ்ப்பாணம்)

யாழ்.தீவகத்தில் உள்ள புங்குடுதீவுப் பிரதேச மக்களின் சுயதொழில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான உதவி களை வழங்க ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் (UNDP) உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்தகால யுத்தம் மற்றும் இடப்பெயர்வுகளால் பாதிக்கப்பட்ட மேற்படி பிரதேச மக்களின் பொருளாதார அபிவிருத்தியின் அவசியத்தைக் கவனத்தில் கொண்டே ஐக்கியநாடுகள் சபையின் அபிவிருத்தித்திட்டத்தின் (UNDP) யின் கீழ் இந்த உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. (33)

## பனைவள ஆராய்ச்சி நிலையத்தை புனரமைத்து மீள இயங்க வைக்கக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.கைதடியில் உள்ள பனைவள ஆராய்ச்சி நிலையத்தைப் புனரமைத்து மீள இயக்குவதற்குரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பனைவளம் செறிவாகக் காணப்படும் யாழ்.குடாநாட்டில் பனைவளம் தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொண்டு பனைவளத்தை நம்பி வாழும் மக்களின் மேம்பாட்டுக்கு உதவும் முகமாக கைதடியில் நிறுவப்பட்டுள்ள மேற்படி பனைவள ஆராய்ச்சி நிலையம் கடந்த கால இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கை காரணமாகச் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது.

இதனால் பனைவளத்தை நம்பி வாழ்வோரது மேம்பாடுகளில் பாரிய வீழ்ச்சிகள் உருவாகியிருப்பதைச் சுட்டிக்காட்டியே மேற்படி பனைவள ஆராச்சி நிலையத்தை புனரமைத்து இயங்க நடவடிக்கை எடுக்குமாறு கோரப்பட்டுள்ளது. (33)

## தமிழ் இலக்கிய விழா குறித்த ஏற்பாட்டுக்கூட்டம் இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 9,10,11 ஆம் திகதிகளில் கொண்டாடப் படவுள்ள தமிழ் இலக்கிய விழாக் குறித்த ஏற்பாட்டுக்குழுக் கூட்டம் இன்று மாலை 4.00 மணிக்கு யாழ்.வலயக்கல்வி அலுவலக மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

தமிழ், இலக்கிய விழாதொடர்பான நிகழ்வுகள் குறித்த முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ள இக்கூட்டத்தில் கல்விப்பணிப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், தமிழ்இலக்கிய ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (33)

இன்று ஆசிரியர் தினம் சர்வதேசத்திலும் கொண்டாடப்படுகிறது. இன்று பல புதிய சிந்தனைகளையும், அனுபவங்களையும் ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் உள்ளெடுத்துக்கொள்ளும் நாள்.

ஆசிரியர் தன்னைச் சுயமதிப்பீடு செய்துகொள்ளும் நாள். ஆசிரியர் தனது வகுப்பறைச் செயற்பாட்டில் புதிய உத்வேகத்தை பிரயோகிக்க சபதம் எடுக்கும் நாள். ஆசிரியன் தனது அனுபவத்தை அதிகரித்துக்கொள்ள தீர்மானம் எடுக்கும் நாள்.

ஒட்டுமொத்தமாக ஓர் ஆசிரியன் தன்னை புதிய போக்கிற்கும், புதிய வாழ்விற்கும் தயார்படுத்தும் நாளாக இது இருக்கும் பட்சத்திலேயே இந்த நாளைக் கொண்டாடுவது அர்த்தமுள்ள முழுமை கொண்டதாகும்.

"நடத்தை மாற்றமே கற்றலாகிறது" என்கின்றார்கள் கல்விச் சிந்தனையாளர்கள். மனிதனுக்குள் பாச்சப்படுகின்ற புதிய அனுபவங்கள் அவனைப் புதிய புதிய மனிதனாக நாளுக்கு நாள் மாற்றுகிறதே உண்மை. எனவே வருடா வருடம் ஓர் ஆசிரியன் புதிய புதிய ஆசிரியனாக மாறுகிறான். அதனை நினைவுகூரும் நாளிது.

இன்று ஆசிரியர் சமூகம் சுமக்கின்ற சுமைகள் சொல்லற்கரியது, விளங்கற்கரியது. அதேவேளை சமூகம் ஏற்கவும் மறுக்கின்றது.

யாமை, விழுமியம், மனப்பாங்கு எனவும் நோக்கற்பாலது.

அவனது துறைசார்ந்தது என்பது அவன் எடுத்துள்ள பயிற்சி, அறிவு முதலான தொடர்பும் அவனது வாண்மை அபிவிருத்தி அவனது படைப்பு, அதாவது அவனது கைவண்ணத்தில் ஆக்கி சமூகத்திற்கு வழங்கும் பிள்ளைகளின் மிளிர்ச்சி சார்ந்தவை எனலாம்.

அவனது பொறுப்பு அதனை சமூகத்தின் தேவையின் நிலைநின்று அவன் நிறைவேற்றுதலானது அவனது பெயரை நிலைக்கச்செய்தலும் வாழ்வித்தலுமாகும்.

தன்னை மகிழ்விக்கவும், தன்னைப் பெருமைப்படுத்தவும் ஆசிரியன் கொண்டாடும் நாளாக இது அமையாது ஆசிரியத்துவம் ஓங்கவும், அதனால் இந்த நானிலம் சிறக்கவும் அவன் வாழும் சமூகம் அவனை வற்புறுத்தும் ஒரு கைங்கரியமான இந்த நாள் அமைகிறது என்பதே நல்லாசிரியன் ஒருவனின் விளக்கமாக அமையும்.

ஆசிரியர்கள், இன்று எதிர்நோக்கும் உடல் உள நெருக்கடி சமூக நெருக்கடிகள் என்பன பற்றி இரண்டாம் பட்சமாகவேனும், ஒருகணம் இந்த நாளில் நினைக்காமல் விடுவது பொருத்தமானதன்று. அந்த வகையில் எமது பகுதியில் வாழும் ஆசிரியர் சமூகம் தனது உழைப்பை உலகிற்கு எடுத்துக்காட்ட கடும் பிரயத்தனம் செய்ய வேண்டியுள்ளது முக்கியமாக குறிப்பிடப்பட

கருவறையில் பிள்ளை தோன்றியவுடனேயே கருத்தில் எடுக்கப்படவேண்டும். கல்வித் தத்துவம் கருவிலேயே திருவாகின்றமையை சான்றாதாரப் படுத்துகின்ற இந் நாளில்.

பிள்ளையின் உரிமைபற்றி அதிக மறிந்துள்ள ஆசிரியன் தன் சொந்தப்பிள்ளைக்கு உரிமைமறுக்கின்ற நிலை ஏற்படுகின்றது.

பிள்ளையின் உழவியல்பற்றிப் படிக்கின்ற, கற்பிக்கின்ற இந்த ஆசிரிய சமுதாயத்தின் அதிகாரிகள் ஓர் ஆசிரியனின் சொந்தப்பிள்ளையின் உரிமை காப்பாற்றப்படவேண்டும் என்று கருதாது பெற்றோரான ஆசிரியர்களை, அவர்களது கோரிக்கைகளை செவிமடுக்காது அலட்சியமாக நடந்துகொள்ளும் சம்பவங்களையும் இந்த நாளில் சுட்டிக்காட்டுவதே சிறந்தது.

சர்வதேச நிறுவனங்களின் அபரீதமான

புரியவேண்டியிருக்கிறது.

"எங்கள் குரல்களையும் சற்றுச் செவி மடுங்கள்"என ஒவ்வொரு ஆசிரியனும் மனம் குமுறுகிறான் என்றால் மிகையல்ல.

இதெல்லாவற்றிக்கும் மேலாக பொருளாதாரத்தடை, யுத்தம், வளத்தை அடைய முடியாத தடைகள் எனவும் எமது பகுதி ஆசிரியர்கள் எதிர்நோக்கினார்கள்.

இன்றைய நாளில் ஒவ்வொரு ஆசிரியனும் தான் சார்ந்த சிறார்களுக்கு "வஞ்சனை இல்லாமல் கற்பித்தேனா? எனவும் தனது கடமையைச் சரிவர நேர்த்தியாக செய்தேனா மாணவனிடம் புதைந்து கிடந்த ஆற்றலை துலக்கினேனா எனவும் தான் பெற்றுக்கொண்ட ஊதியத்திற்குக் குறைவில்லாமல் உழைத்தேனா? எனவும் தன்னைத்தானே கேட்டுக்கொள்வதும் இன்றைய நாளில் தான்.

## இன்று சர்வதேச ஆசிரியர் தினம்

கல்வி ஈடுபாடுகள் இன்றைய ஆசிரிய சமூகத்தை உடல் உள ரீதியாக பாதிக்கப்படுகின்றமையும் இங்கு குறிப்பிடப்பட வேண்டியது. இந்நிறுவனங்கள் "காசுக்காரர்களாக" இருக்கின்ற ஒன்றுமட்டும் தமக்கு கல்வியில் கைவைக்கக் கிடைத்துள்ள தகைமை என நினைப்பதுதான் கொடுமை, அபத்தம் எனலாம்.

இந்த மண்ணில் ஆசிரியன் உளத்தாலும் உடலாலும் எப்போது நின்மதிபெற முடியுமோ அன்றுதான் கல்வியும், விழுமியங்களும் செழுமைபெறும், நாடு சுபீட்சம் பெறும் என்பதுவே உண்மை.

அறிவுக்களஞ்சியங்களான ஆசிரியர்கள் இந்த சமூகத்தால் மகிழ்விக்கப்பட வேண்டும், ஊக்குவிக்கப்படவேண்டும், கௌரவிக்கப்படவேண்டும், அங்கீகரிக்கப்பட வேண்டும்.

இன்றும் எமது மண்ணில் தொண்டு செய்யும் ஆசிரியர்கள் வாழ்கிறார்கள். அவர்களின் கற்பிக்கும் ஆற்றல், அவர்களின் பிள்ளைகளுக்கான அர்ப்பணிப்பு என்பன பலராலும் கவனிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதெனிலும், தனது தொழிலுக்காக ஆசிரியன் உண்ணாவிரதம் தான் மட்டும் இருந்தாலும், தானே மறியல் செய்தாலும்,

பெருமாள் கணேசன்


தானே மகஜர் எழுதுவதும் என்ற நிலை தொடர்கின்றமை ஆசிரியர்கள் எந்தளவிற்கு வேண்டாப்பொருளாகி விட்டார்கள் என்பதற்குத் தக்கசான்று.

ஆசிரியர்கட்காக சமூகம், பெற்றோர், மாணவர் போராடினார்களா? போராடத் தயாரா என்கின்றவற்றுக்கான விடைகள் கவனிப்பைப் பெறும்.. உண்மையில் ஆசிரியனின் தேவையைச் சமூகம் விளங்கி அவர்களுக்காக தாம் போராடவேண்டும் அவர்களை ஒதுக்கிவைக்கும் புறங்களிக்கும் அரச உயர் பீடங்களுக்கு எதிராக செயற்படவேண்டும் என்பதை இந்த மக்கள் புரிதல் மிக அவசியம்.

எமது மண்ணில் 50% ஆசிரியர்கள் தொண்டர்கள் இவர்கள் வாழ்வை நடாத்த முடியாத தவிக்கிறார்கள் என்பதையும் அதற்கான தீர்வு சமூகத்திலேயே இருக்கிறது என்பதும் புரிந்துகொள்ளப்பட வேண்டியது.

எனவே இன்றைய நாள் இந்த சமுதாயம் ஆசிரியனையும், ஆசிரியன் இந்த சமுதாயத்தையும் பரஸ்பரம் நினைக்கின்ற நாளாக அமைந்த மனிதத்துவத்தின் சுபீட்சத்திற்கான படிக்கற்களாக அமைகின்றது.

# புதிய சங்கற்பங்களுடன் ஆசிரியர்கள்



இன்றைய ஆசிரியன் இயந்திரகதியிலும், இயந்திர இருப்பிலும் இருக்கிறான்- இன்று மேற்கொள்ளும் சங்கற்பங்கள் அவனது

1. நிறுவனம் சார்ந்ததாக.

2.அவன் காணும், கற்பிற்கும் பிள்ளைகள் சார்ந்ததாக.

3.அவன் கையாளும் துறை சார்ந்ததாக.

4. அவன் பதில்சொல்லவுள்ள சமூகம் சார்ந்ததாக என விரிகின்றது.

அவனது பாடசாலை பற்றிய அக்கறையானது அவனது பாடசாலையின் மேன்மை, மேம்பாடு, பொலிவு, நிலைபேறு எனவும்,

அவர் கையாளும் பிள்ளைகள் பற்றியதானது பிள்ளையின் உளத் தேவை, உடற் தேவை, அறிவூட்டலின் அளவு, அவனின் வாழ்க்கைப்பின்புலம், அவனது பெற்றோரின் கனவு, நிலை, இயலுமை, அறி

வேண்டியது.

எமது பாடசாலைகளிலுள்ள

I. பௌதிக வளம் போதாமை

II.மனிதவளம் போதாமை,

III.தொழில்நுட்பவளம் போதாமை

IV வாண்மை அபிவிருத்திக்கான இடைஞ்சல்.

V. பொருளாதாரப் பற்றாக்குறை

VI.வேலைகொள்வோர் மதிப்பளிக்காமை.

VII.வேலைகொள்வோர் மனிதாபிமானமாக நடாத்தாமை என விரிகின்றது.

பிள்ளையின் உரிமை உண்மையில்

அதிகாரிகளாக இருப்பவர்கள் உண்மையில் ஆசிரியர்களாக இருந்து வந்தவர்கள் தான். எனினும் தான் சுமந்த பழுவையெல்லாம் சுமக்கத்தான் வேண்டும். அது உங்கள் தலைவிதி என்கின்ற பாணியில் ஆசிரியர்களது உள்ளக்குமுறலை, மனக்கொதிப்பை கேட்காமல் புறந்தள்ளுகின்றமை நாளுக்கு நாள் அதிகரிக்கின்றது.

உண்மையில் பேச்சுச் சுதந்திரமும், எழுத்துச் சுதந்திரமும் ஆசிரியர்களின் உரிமை என்பதை இந்த மனுக்குலமே

## "உலகின் இணையில்லாத சொத்து"

மாதா, பிதா, குரு, தெய்வம்-எம்
மண்ணில் மனிதன் கண்முன் கண்ட கடவுள்
அன்னை தந்தைக்கு அடுத்த இடம்
அறிவை வளர்க்கும் ஆசானுக்கே.

தாயாய், தந்தையாய்,
தோழனாய், ஆசானாய்,
நின்றே சீடனை
வழிகாட்டுபவர் ஆசிரியரே

ஆசகற்றி அறிவொளி ஏற்றி
அகிலத்தில் ஒளிரும் மாணிக்கங்களாய்
மாணவச் செல்வங்களைப் பட்டைதீட்டிடும்
பொற்கொல்லர் ஆசிரியரே.

ஓடங்கள் கரை சேர்வதில்லை. ஆனாலும் அதன்
ஓட்டங்கள் நின்று போவதில்லை.
ஏணிகள் மேலே ஏறிவிடுவதில்லை ஆனாலும்
அது ஏறுவோரை என்றும் ஏமாற்றியதில்லை.


ஏணியாய்த் தோணியாய்
உழைத்திடும் ஆசிரியர்
இந்த உலகின்
இணையில்லாச் சொத்து.

பா.வசந்தகுமாரி

## பாடசாலை மட்டத்திலான ஆசிரியர் கௌரவிப்பு நிகழ்வுகள்










(படங்கள் - 12.ச.சோ)




## 27

* யாழ்பொலிசாரால் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஒருவரின் நலன்கள் குறித்து விசாரணை செய்வதற்காக பொலிஸ் நிலையத்திற்குச் சென்ற இலங்கை மனித வுரிமைகள் ஆணைக்குழு மற்றும் ஐ. நாடுகள் சபையின் மனிதவுரிமைகள் அமைப்பின் அதிகாரிகள் பொலிசாரால் தாக்கப்பட்டனர்.

* இணுவில் பகுதியில் ஈ.பி. ஆர்.எல்.எவ். (வரதரணி) உறுப்பினர் வல்லிசுந்தரம் சுட்டுக்கொலை.

* தமிழ்ச்சங்கம் நடாத்தும் திரு வள்ளுவர் விழா கிளிநொச்சியில் ஆரம்பம்.



விழாவில்

* சனாதிபதி பிரேரித்துள்ள தேசிய ஆலோ சனைச் சபையில் அங்கம் வகிக்கவோ, அதன் கூட்டங்களில் பங்கு பற்றவோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தயாரில்லையென மாவை சேனாதிராசா அரசின் சமாதானச் செயலகத்திற்குத் தெரிவிப்பு.

* புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகார வரைவிற்கேற்ப இனப்பிரச் சினை யைத் தீர்க்காவிட்டால் நாடு இரண்டாகப் பிரிவதைத் தடுக்க முடியா தென ஐ.தே.கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மிலிந்த மொறகொட கூட்ட மொன்றில் தெரிவிப்பு.

## 28

* அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் உள்ளிட்ட குழுவினர் ஐரோப் பாவிற்கு விஜயம்.



ஐரோப்பா பயணம்

* சமாதான முன்னெடுப்புக்களில் நோர் வேயின் அனுசரணைக்கெதிராக ஐந்து மில்லியன் கையெழுத்துக்கள் திரட்டும் நடவடிக்கையை ஹெல உறுமய கண்டி யில் ஆரம்பித்தது.

* ஜெனீவாவிற்குப் புறப்படும் முன்னர் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நோர்வேத்தூதுவர் லாரன்ஸ் பிரஸ்கரைச் சந்தித்தார்.

* கிளிநொச்சி தமிழ்ச்சங்கம் நடாத்தும் திருவள்ளுவர் விழாவின் இறுதிநாள் நிகழ்வுகள் மிகவும் கோலாகலமாக இடம் பெற்றன.

* நியூயோர்க் சென்றிருந்த சனாதிபதி சந்திரிகா கொழும்பு திரும்பினார்.

* அண்மையில் யாழ்.குடாநாட்டில் இடம் பெற்ற கொலைச்சம்பவங்களுக்கும் தமக் கும் எவ்வித தொடர்பும் இல்லையென யாழ்..மாவட்ட அரசியல்துறையினர் தெரி விப்பு.

## 29

* சிறிலங்கா கடற்பரப்பில் வெளி நாட்டுக கப்பல் ஒன்று வெடிவிபத்துக்குள்ளானது.

* பாதுகாப்புக் கோரிய அனைவருக் கும் அதிகூடிய பாதுகாப்பு வழங்க நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சனாதி பதிச் செயலகம் வெளியிட்ட அறிக கையில் தெரிவிப்பு.

* இரா.நடராசனின் அறிவியல் கண் ணோட்டத்துடன் எழுதிய "ஆயிஷா" ஓர் பள்ளி மாணவியின் கதை நூல் அறிமுக விழா கிளி.ம.வி.யில் நடைபெற்றது.




நூல் அறிமுக விழாவில்...

* புலிகளின் மட்டக்களப்பு வாகரை பனிச்சங்கேணியிலுள்ள முன்னணிக் காவல் நிலைகள் மீதான தாக்குதல் யுத்தசூனியப் பிரதேசத்திலிருந்தே மேற்கொள்ளப்பட்டுள் ளதெனக் கண்காணிப்புக்குழு விசாரணை யின் மூலம் தெரிவிப்பு.

## 30

* மன்னாரில் இனம் தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி குடும்பஸ்தா ஒருவர் பலி.

* இலங்கைக்கான அமெரிக்கத்தூதுவர் ஜெப்ரிலுன்ஸ்ரிக்கை தமிழ்த்தேசியக் கூட்ட மைப்பினர் சந்தித்தனர்.

* யாழ்.மாவட்ட சமாதானத்திற்கும் நல் லெண்ணத்திற்குமான மக்கள் குழுவினர் மக் களின் இயல்பு வாழ்வு குறித்து ஆறு கோரிக கைகளை யாழ்.மாவட்ட இராணுவத்தளப தியிடம் முன்வைத்தனர்.

* சிங்களத் திரைப்பட உலகின் முன் னணி நடிகரும், இயக்குனருமான காமினி பொன் சேகர மரணம்.

* பெண்கள் அமைப்புக்களின் சங்கம் நிகழ்வு கிளிநொச்சியில் நடைபெற்றது.

* வட-கிழக்கு மாகாண பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் யாழ்.குடாநாட்டின் மேலதிக மாகாணக்கல்விப் பணிமனை, யாழ்கல்விவலயம் ஆகியவற்றின் முன்னால மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



ஆசிரியர் போராட்டம்...


* மட்டக்களப்பில் விடுதலைப்புலிகள் அமைப்பில் சுயவிருப்பத்தின் பேரில் இணையச்சென்ற இரண்டு சிறுவர்கள் யுனி செப் ஊடாகப் பெற்றோரிடம் ஒப்படைப்பு.

* சமாதான முயற்சிகளை இழுத்தடிப்பு நாடகமாக்கியிருக்கிறார் சனாதிபதி. அதில் அவர் இரட்டை வேடமிட்டு நடிக்கின்றார் என பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் செய்தியாளர் மாநாட்டில் தெரிவிப்பு.

* அம்பாறையில் நடத்தப்பட்ட ஹர்த் தால் அரசியல் வாதி ஒருவரின் சதிவேலையென மட்டு.அம்பாறை அரசியல்துறை அறிக்கை மூலம் தெரிவிப்பு.

## 01

* சுவிற்சர்லாந்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள், சட்டநிபுணர்களுட னான கலந்துரையாடல் ஆரம்பம். இதன் போது இடைக்கால நிர்வாகசபைக்கான வரைவு பற்றியும், அடுத்த கட்ட நடவடிக்கைகள் பற்றியும் ஆராயப்பட்டன.



ஆரம்ப நிகழ்வில்...




தேசியத் தலைவர் குறித்த நூல் வெளியீட்டு நிகழ்வில்...

* ஜெனீவா சென்றுள்ள விடுதலைப் புலிகளின் அரசியற்குழுவினரைச் சுவிற் சர்லாந்து வெளியுறவு அமைச்சின் உயரதி காரிகளும், நிபுணர்களும் சந்தித்துக் கலந் துரையாடினர்.



கலந்துரையாடல்...

* தமிழீழத்தின் அனைத்துப் பகுதிகளிலும் சிறுவர் தினநிகழ்வு வெகுவிமர்சையாகக் கொண்டாடப்பட்ட்து.




சர்வதேச சிறுவர் தின நிகழ்வில்...

* மன்னாரில் இடம்பெற்ற கொலைச் சம்பவத்திற்கும், எமக்கும், எவ்வித தொடர்பு மில்லையென மன்னார் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இனியவன் பி.பி.சிக்கு தெரிவிப்பு.

* மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் தாக்குதலில் தேசவி ரோதிகள் மூன்று பேர் பலி.

* நிதர்சன மகளிர் பிரிவின் தயாரிப்பில் உருவான "அக்கினிப் பறவைகள்" பாகம்-02 விவரணச்சித்திரம் ஒளிநாடா வெளியீட்டு விழா திருகோணமலை நகரமண்டபத்தில் இடம்பெற்றது.



ஒளிநாடா வெளியீடு...

## 02

* இந்தியமீனவர்களின் அத்துமீறலை நிறுத்துமாறு குடாநாட்டு மீனவர்கள் இந்திய மீனவர் சங்கப்பிரதிநிதிகளிடம் வலியுறுத்தினர்.

* "கண்ணீர்ப்பயணங்கள் " (பாகம்-1,2) நூல் வெளியீட்டு விழா சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் இடம் பெற்றது.

* 2ஆம் லெப்.மாலதியின் நினைவு நாளையொட்டி முல்லைத்தீவு மாவட்ட பெண்கள் சங்கம நிகழ்வு முள்ளியவளை மத்திய கல்லூரியில் சிறப்புற இடம் பெற் றது.



சங்கம நிகழ்வில்...

## 03

* தமிழீழத்தேசியத் தலைவரின் பன்முக ஆளுமையைச்சித்திரிக்கும் ஆங்கில நூலை சுவிசில் தமிழீழகாவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் வெளியிட்டு வைத்தார்.

* "தமிழரின் விடுதலை நோக்கிய வரலாறு தலைவர் பிரபாகரனின் வரலாறே ஆகும்". என காவல்துறைப் பொறுப்பாளர் நடேசன் தேசியத்தலைவர் அவர்களின் பன்முக ஆளுமையைச்சித் திரிக்கும் நூல் வெளியீட்டு விழாவில் தெரிவிப்பு.

* சுவிற்சர்லாந்தின் ஜெனீவா நகரில் புலிகளின் அரசியல் விவகாரக் குழு வினரும், தமிழீழத்தாயக மனிதவுரிமை கள் குழுவினரும் சந்தித்தனர்.

* பருத்தித்துறை வியாபாரிமூலைப் பகுதியில் இளைஞர் ஒருவர் மீது படையினர் தாக்குதல் நடத்தினர்.

* யாழ். மாவட்ட மகளிர் அமைப்புக் களின் சங்கம நிகழ்வு இடம்பெற்றது.




குடாநாட்டில்சங்கமம்...

# அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வை வழங்க 90 கோடி ரூபா தேவைப்படுகிறது

## 40 கோடியை மட்டும் ஒதுக்க அரசு யோசனை

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்களின் 70 வீத சம்பள அதிகரிப்பை வழங்குவதற்கு 90 கோடி ரூபாய் தேவை என ஏற்கனவே அரசு ஒப்புக்கொண்டுள்ளது.ஆனால் இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் 40 கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கப்படும் என நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த வேதனத்தைப் பெறுவதற்கு 16 இலட்சம் அரச ஊழியர்கள் உள்ளனர் என புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. புதிதாக நியமனம் பெற்றுள்ள பட்டதாரிகளுக்கு 6000 ரூபா வீதம் கொடுப்பதற்கு வருடத்திற்கு 200 கோடி ரூபாய் தேவைப்படுகின்றதென நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

# யாழ்ப்பாணம் - மாநகரசபை

### கள்ளியங்காடு சந்தைக்கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான

## கேள்வி அறிவித்தல் - 2004

மாநகர சபைக்குச் சொந்தமான கள்ளியங்காடு சந்தையில் புதிதாக சபையால் அமைக்கப்பட்டுள்ள கடைகளை இலங்கைப் பிரஜைகளிடமிருந்து குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்.மாநகர ஆணையாளராகிய என்னால் 22.10.2004 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப.2.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விகள் குறித்த அட்டவணையில் குறிப்பிட்டுள்ள மீளளிக்கப்படக்கூடிய கேள்விப் பிணைப்பணம் ரூபா 10,000உம், மீளளிக்க முடியாத கேள்விப் படிவக்கட்டணம் ரூபா 1000உம், பெறுமதி சேர்வரி (Vat) ரூபா 150 (15%) உம் செலுத்துவதன் பெயரில் 21.10.2004 ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப.12.00மணி வரையும் மாநகரசபையால் வழங்கப்படும் உத்தியோகபூர்வமான விண்ணப்பப்படிவங்களில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் பெறுபவர்கள் கேள்விப் பத்திரம் பெறவரும்போது அவர்களுடைய தேசிய அடையாள அட்டையினைக்கொண்டு வருதல் வேண்டும்.

பூர்த்திசெய்யப்பட்ட கேள்விப்படிவங்களை இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். அல்லது "ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்" என்ற முகவரியிட்டு அரக்கு முத்திரையிட்ட உறையிலிட்டு இடது மேல் மூலையில் "கள்ளியங் காடு சந்தைக் கடை குத்தகை" எனக் குறிப்பிட்டு 22.10.2004 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப.2.00 மணிக்கு முன்பு கிடைக்கக்கூடியதாகப் பதிவுத் தபால்மூலம் அனுப்பப்படுதல் வேண்டும். தபாலில் ஏற்படும் தாமதங்களுக்கு மாநகரசபை பொறுப்பேற்க மாட்டாது.

கிடைக்கப்பெற்ற கேள்விகள் 22.10.2004 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப.3.00 மணிக்கு கேள்விச்சபையால் திறந்து பரிசீலிக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரர் அல்லது அவரது பிரதிநிதி சமுகமளிக்கமுடியும். எந்தவொரு கேள்வியையும் ஏற்கவோ, நிராகரிக்கவோ, கேள்விச்சபைக்கு பூரண அதிகாரமுண்டு.

மேலதிக விபரங்களை அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.


தங்களால் கோரப்படும் கேள்விக்கு மேலதிகமாக 15% பெறுமதிசேர் வரியும் சேர்ந்து செலுத்தல் வேண்டும்.

| கடைகள் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை பெறுமதிசேர்வரி (Vat) தவிர்த்து) |
|---|---|
| 1. கீழ்தளக் கடைகள் (கடை ஒன்றிற்கு) | 360,000 /= |
| 2. முதலாம் மாடிக்கடைகள் (கடை ஒன்றிற்கு) | 180,000/= |

கலாநிதி க.குணராசா,
ஆணையாளர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

(சி-10481)

# நான்காம் ஆண்டின் ஞாபகங்கள்



## வீரவேங்கை தமிழ் மொழி

### தேவராசா ஸ்ரீரஞ்சினி

(இல. 03, 30 வீட்டுத்திட்டம், உதயநகர்மேற்கு, கிளிநொச்சி.)

தாய் அணைப்பில் 19. 09. 1984
தாயக அணைப்பில் 06. 10. 2000

ஆண்டுகள் நான்கு - ஆறவில்லை.
உன் நினைவுகள்.
சேமித்த உன் சிரிப்புக்களை - எம்மால்
செலவிட முடியவில்லை.
எம் அன்புச் செல்லமே - உன்
நினைவுகள் எம்மைக் கொடுமைப்படுத்துகின்றன.

சொல்லித் தீரவில்லை - எம்மால்
சொல்லவும் முடியவில்லை
எழுது கோல் கொண்டு.
வேதனை தீராது
ஏங்குகின்றோம்...நாமிங்கு..

இந் நாளிலும், இதுவரைகாலமும் தமிழர் துயர் நீக்க காவியமான மாவீரர்களையும், அப்பாவித் தமிழ் மக்களையும் இந் நாளில் நினைவு கூருகின்றோம்.

உன் துயரினில்

அப்பா (தேவராசா), அம்மா (லக்சுமி)
அண்ணா மயூரன் (தங்கநிலா நகைமாடம்),
அக்காமார்- கருணானந்தி, கிருபானந்தி (ஆயப்பகுதி)
விஜிதானந்தி (போ.க.பிரிவு),
அத்தான் - கண்ணன் (துருக்கி),
பெறாமகள் (பிரணவி)

(5151)

# கிராமிய அபிவிருத்தி வங்கியின் நேர்முகத் தேர்வுக்கான இடம்,திகதி மாற்றம் தொடர்பான அறிவித்தல்

கிராமிய அபிவிருத்தி வங்கியினால் நேர்முகத் தேர்வுக்காக இம்மாதம் 6ஆம், 7ஆம், 8ஆம் திகதிகளில் அழைக்கப்பட்டவர்களுக்கான நேர்முகத் தேர்வு நேரம், இடம் என்பன மாற்றப்பட்டுள்ளது. எனவே மேற் குறிப்பிடப்பட்டவர்கள் அனைவரையும் 08.10.2004 வெள் ளிக்கிழமை அன்று நேர்முகத் தேர்வுக்காக பிரதான சாலை, கிளிநொச்சியிலுள்ள கிராமிய அபிவிருத்தி வங்கியின் கிளிநொச்சி கிளைக்கு காலை 09.00 மணிக் கும், நண்பகல் 12.00 மணிக்கும் இடையில் உரிய ஆவணங் களுடன் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றனர்.

பொதுமேலாளர்,
கிராமிய அபிவிருத்தி வங்கி,
மத்தியசெயலகம்,
கிளிநொச்சி.

(சி-10258)

# எழுத்துத் தேர்வு


தமிழீழ வைப்பகத்திற்கு உத்தியோக உதவியாளர் தரம் - 03 இல் ஆட்சேர்ப்பதற்கான எழுத்துத்தேர்வு எதிர்வரும் 09.10.2004 ஆம் நாள் சனிக்கிழமை காலை 10.00மணி முதல் 12.00மணிவரை, கிளி/ கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் நடைபெறும். உரிய பரீட்சார்த்திகளிற்கு அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாதவர்கள் அருகிலுள்ள தமிழீழ வைப்பகக் கிளையில் தங்களது பெயர் விபரங்களைப் பார்வையிடலாம்.

மேலாளர்,
ஆளுகைப்பகுதி,
நடுவப்பணியகம்,
தமிழீழ வைப்பகம்.

(சி-10251)

# 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணின் மடியில் முத்தாக
07 . 01 . 1976



மறப்போர்க் களத்தில் வித்தாக
06 . 10 . 1998

## கடற்புலி மேஜர் கலாநிதி

### இராஜேந்திரம் நந்தினி (சீலா)

### ஆழியவளை, யாழ்.

சிக்குறுவின் சிக்கெடுப்பில்
வேள்வித் தீயாய் வெந்தவளே-உன் நினைவில் இன்று
கனகராயன் குளத்தில் கார்மேகங்கள்
கானமிசைக்கின்றன-உன்
கல்லறைக்குப் பூச்சொரிந்து எம்
கைகள் சிவக்கின்றன.

06.10.1998 அன்று இவருடன் வீரச்சாவடைந்த மாவீரர்களையும் இந்நாளில் நினைவு கூருகிறோம்.

உபதபாலகம்,
ஆழியவளை.

(5147)

தகவல்,
குடும்பத்தினர்.

# பா.ஜ.சிவசேனைக் கூட்டணி இந். மக்களை ஏமாற்ற முடியாது

## மாராட்டிய சட்டசபை தேர்தல் பிரச்சாரத்தில் சோனியாகாந்தி

பா.ஜ. கட்சி மக்களை இனி ஏமாற்ற முடியாது காங்.கூட்டணி மீண்டும் ஆட்சியமைக்கும் என்று மாராட்டிய சட்டசபைத் தேர்தல் பிரச்சாரத்தில் சோனியா காந்தி கூறியுள்ளார். லஞ்ச ஊழல் நட்வடிக்கையால் தே. ஜ. கூட்டணி அரசு பதவியிழந்தது என்று பேசிய சோனியா 1999 சட்டசபைத் தேர்தலில் மாராட்டியத்தில் காங்கிரசும்,தேசியவாதக் காங்கிரசும் தனித்தனியாகப் போட்டியிட்டனர். அப்படியிருந்தும் பா.ஜ.சிவசோனைக் கூட்டணியைத் தோற்கடித்து இரு கட்சிகளும் சேர்ந்து கூட்டணி ஆட்சியமைத்தன. நடக்கவிருக்கும் சட்டசபைத் தேர்தலில் காங்கிரசும் தேசியவாதக் காங் கிரசும் கூட்டணி அமைத்துப் போட்டியிடுகின்றன. இரு கட்சிகளும் பொதுவான ஒரே தேர்தல் அறிக்கையைத்தான் வெளியிட்டன எனக் கூறினார் சோனியா.

# அசாம்,நாகலாந்துத் தாக்குதலுக்கு கோபி அனான் கண்டனம்

அசாம் மற்றும் நாகலாந்து மாநிலங்களில் இடம்பெற்ற குண்டுத்தாக்குதல் சம்பவங்களுக்கு ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலர் கோபி அனான் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்தியில் தீவிரவாதிகள் தாக்குதலில் உயிரிழந்த நாகலாந்து அசாம் மக்களுக்கு இந்த இரங்கலைத் தெரிவிப்பதாகக் கூறியுள்ளார்.

## 6 ஆம் ஆண்டு நினைவில்



கிளி. மண்ணில் முத்தாக 28-08-1969

கிளி. மண்ணில் வித்தாக 28-09-1998

நாட்டுப்பற்றாளர்

**மாணிக்கம் சுதானந்தராசா (சுதா)**

( கூட்டுறவுக் கல்லூரி மாணவனும் கரைச்சி கிழக்கு ப.நோ.கூ.ச.பணியாளரும்)

06-10-2004, சதய நட்சத்திரம் கூடிய அட்டமி திதி

ஆண்டுகள் ஆறு ஆனபோதும்
ஆறவில்லை நம் துயரம்
எங்கள் செல்வ மகனே எங்கு சென்றாய்?
நீ வரும் நாளை ஆவலோடு பார்த்திருக்க
நாட்டுப் பற்றாளனாய் வீடு வந்து சேர்ந்தாய்.
நாட்டுக்காக உயிரைத் தியாகம் செய்த மகனே
உன் நினைவுகள் எம் கண்முன்னே நிழலாடும்
உன் நினைவுகள் என்றும் மாறாது,மாறாது.
ஓம் சாந்தி! ஓம்சாந்தி! ஓம்சாந்தி!

உமது பணியை நாங்களும் தொடருவோம்


உன் நினைவுகளுடன்,
தாய், தந்தை, சகோதரர்கள்,
உறவுகள்.

சி.மாணிக்கம்,
இல.11,புதுக்காடு,
இராமநாதபுரம்.

(சி.10449)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணின் மடியில் 18 . 11 . 1975



விண்ணின் மடியில் 06 . 10 . 2002

**சோதிலிங்கம் கவிலராசன்**
**(நட்டாங்கண்டல்)**

மன்னவனே! எங்கள் மாதவனே!
மாண்புமிகு எங்கள் மாவேந்தனே!
பெற்ற அன்னையும் உடன் பிறந்த சகோதரர்களும்!
உறவினர்களும், நண்பர்களும் வாடிவதங்க
சுற்றமெல்லாம் சுற்றி இருக்க, சுறுக்காய் எம்மை-விட்டு
விரைந்து சென்று இரு ஆண்டுகள் அல்ல எத்தனை
நூறு ஆண்டுகள் சென்றாலும் கவி உங்கள்
நினைவு எம்மனதில் ஆறாது ஐயநீகவல்,

சோ.இதயராசன்,
அண்ணன்,
ஆசிரியர்.

நட்டாங்கண்டல்


(சி.10243)

# கிளி/இராமநாதபுரம் மகாவித்தியாலயம்

## இராமநாதபுரம்

## உலக ஆசிரியர்தினம் ஒக்டோபர்-06

2004





## "எழுத்தறிவித்தவன் இறைவன்"

பாடசாலையின் வளர்ச்சிக்கும் மாணவர்களின் பல்தர உயர்ச்சிக்கும்
அயராது உழைத்த எமது பாடசாலை ஆசிரியர்களையும்,
வலயக் கல்விப் பணிமனையைச் சார்ந்த சகலரையும் வாழ்த்துகின்றோம்.






பழைய மாணவர் சங்கம்
கிளி/ இராமநாதபுரம்
மகாவித்தியாலயம்
இராமநாதபுரம்

(சி.10555)






# அவுஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட்; இந்திய சார்பில் 3 சுழற்பந்து வீரர்கள் களத்தில்



இன்று பெங்களூரில் ஆரம்பமாகும் அவுஸ்திரேலியாவுடனான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி மூன்று சுழற்பந்து வீச்சாளர்களைப் பயன்படுத்தவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

பெங்களூர் சின்னச்சாமி மைதானம் சுழற்பந்து வீச்சாளர்களுக்கே அதிக சாதகமானதால் இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இந்தத் தொடர் தொடர்பாக கருத்துத் தெரிவித்த புச்சானன் இரு அணிகளும் பாரிய தயார்ப்படுத்தலை செய்துள்ளதால் ஒட்டுமொத்த போட்டி முடிவுகளையும் கூறமுடியாதுள்ளதாகத் தெரிவித்தார்.

தனது அணி வீரர்கள் அண்மைக்காலத்தில் பெரிதாகச் சாதிக்கவில்லை. அது மந்த நிலையிலேயே இருப்பதாகத் தெரிவித்தார்.

அவுஸ்திரேலியா இந்தியாவை இந்தியாவில் 1969ஆம் ஆண்டில் வெற்றி கொண்டது. அப்போது பில்லாரி அணித் தலைவராக இருந்தார். எனினும், 1998, 2001 ஆம் ஆண்டுகளில் இந்தியா வெற்றி பெற்றது.

அவுஸ்திரேலிய அணியும் கிளென் மெக்ராத், கஸ்ப்ரோவிச், கிளெஸ்பி போன்ற வேகப்பந்து வீச்சாளர்களையும் ஒரேயொரு சுழற்பந்து வீச்சாளரான ஷேன் வோர்னையும் இப்போட்டியில் களமிறக்கவுள்ளது.

## பதவி விலகினார்

மேற்கிந்தியத்தீவின் கிரிக்கெட் பயிற்றுவிப்பாளர் கிறிஸ்லமி தனது பதவியிலிருந்து விலகியுள்ளார்.

மேற்கிந்திய கிரிக்கெட் சபையின் சுமுகமான இரு தரப்பு இணக்க அடிப்படையில் இவருடைய ஒப்பந்தம் முடிவுக்கு வந்துள்ளதாக மேற்கிந்திய கிரிக்கெட்சபை அறிவித்துள்ளது.

2005ஆம் ஆண்டு யூன் மாதம் வரை ஒப்பந்தத்திலுள்ள கிறிஸ்லமியின் திறமையான வழி நடத்தலின் கீழ் மேற்கிந்தியத்தீவு ஐ.சி.சி சம்பியன் கிண்ணத்தை இங்கிலாந்தில் வெற்றி கொண்டது.

இந் நிலையில் சனவரி மாதம் அவுஸ்திரேலியா செல்லவுள்ள மேற்கிந்தியத் தீவுக்கு புதிய பயிற்றுவிப்பாளர் நியமிக்கப்படவுள்ளார்.

# பாகிஸ்தானை அதன் சொந்த மண்ணில் தோற்கடிப்பது இலகுவான விடயமல்ல

### அத்தப்பத்து



பாகிஸ்தான் வீரர்களை அவர்களது தாயக மண்ணில் தோற்கடிப்பது இலகுவான விடயம் அல்ல என சிறிலங்கா கிரிக்கெட் அணித் தலைவர் மாவன் அத்தப்பத்து தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானில் நடைபெற்றுவரும் மும்முனை கிரிக்கெட் தொடரில் சிறிலங்கா அணி கலந்து கொள்ளும் முதலாவது போட்டி இன்று கராச்சியில் நடைபெறுகின்றது.

இதற்காக சிறிலங்கா அணி நேற்று முன்தினம் பாகிஸ்தான் சென்றடைந்தது.

அங்கு கருத்துத் தெரிவித்தபோதே அத்தப்பத்து மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பயிற்றுவிப்பாளர் ஜோன் டைசன் தெரிவிக்கையில்,

சிறிலங்கா அணியில் அனைத்து வீரர்களும் உயர் தரத்தில் உள்ளனர். விசேடமாக கடந்த ஒரு வருட காலத்தை பார்க்கும்போது எமது வீரர்கள் வெளிப்படுத்திய ஆற்றல்களை இம்முறை போட்டிகளிலும் முன்கொண்டு செல்ல முடியும். உண்மையாக எமக்கு சாதகமான சூழ்நிலையில் விளையாடவுள்ளமை சாதகமான ஒரு விடயமாகும்.


ஒரு நாள் போட்டியின் இறுதிப் போட்டி வரை முன்னேற எம்மால் முடியும் என நான் கருதுகின்றேன்.

இறுதிப் போட்டியை தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடையிலான டெஸ்ட் போட்டி விறுவிறுப்பாக அமையும். இந்த இரு டெஸ்ட் போட்டிகளையும் இலகுவானது எனக் கருத முடியாது. எவ்வாறாயினும் விறுவிறுப்பான போட்டியை காண சந்தர்ப்பம் கிடைக்கும் என்றார் டைசன்.




# வெற்றியை ருசித்த எங்களுக்கு இந்தியா மட்டுமே ஏமாற்றுகின்றது

### ஷேன் வோர்ன்



எனக்கு மட்டுமல்ல எங்கள் வீரர்கள் பலருக்கும் இந்தியா ரொம்பப் பிடிக்கும். உலகின் அனைத்துத்திசைகளிலும் வெற்றியை ருசித்து விட்ட எங்களை இந்த ஒரு இடம் மட்டும் ஏமாற்றுகின்றது. அதுவும் இம்முறை நீங்கி விடும் என்ற நம்பிக்கையுடன் வந்திருக்கிறோம். இங்குள்ள மக்கள், கிரிக்கெட்டை வெறித்தனமாக ரசிப்பவர்கள் அல்ல நன்கு புரிந்து அனுபவிப்பவர்கள். உலகின் தலைசிறந்த கிரிக்கெட் ரசிகர்கள் முன் விளையாட எனக்கு மிகவும் இஷ்டமே என அவுஸ்திரேலியா சுழற்பந்து வீரர்ஷேன் வோர்ன்தெரிவித்தார்.

கடந்த பயணங்களில் நாங்கள் செய்த சில தவறுகள் தோல்வியைத்தந்தன. இந்தியா மிகவும் அபாயகரமான அணி இம்முறை எந்த ஒரு தனிநபரையும் குறிவைத்து விளையாடமாட்டோம். எங்கள் இலக்கு ஒட்டுமொத்த இந்தியஅணி. இந்திய சுழற்பந்து வீரர்களை எப்படிச் சமாளிப்பது என்பதை எங்கள் துடுப்பாட்ட வீரர்கள் தெரிந்து வைத்திருக்கிறார்கள். சமீபத்தில் இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடரை அதன் சொந்த மண்ணில் 3-0என்ற முன்னிலையில் கைப்பற்றியதே அதுவும் முரளிதரன் பந்து வீச்சைச் சமாளித்தது எங்கள் திறமைக்குச் சாட்சி என்றார்.

# ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் விக்கெட் காப்பாளராக யுனிஸ்கான்?

### பொப் வூல்மர்



பாகிஸ்தான் கிரிக்கெட் அணியில் உள்ள விக்கெட் காப்பாளர் மொயின்கானைப் போன்று யுனிஸ்கானும் விக்கெட் காப்பாளர் பணியை திறம்பட செய்வதாக அணியின் பயிற்றுநர் பொப் வூல்மர் தெரிவித்துள்ளார்.


நடந்து முடிந்த சிம்பாப்வேக்கு எதிரான இரண்டாவது ஒரு நாள் போட்டியில் அவர் 70 ஓட்டங்களைப் பெற்று ஆட்டநாயகனானார் எனக் கூறிய வூல்மர் பந்து வீச்சிலும் திறமையை வெளிப்படுத்தியதாகத் தெரிவித்தார்.

இன்று ஒரு நாள் போட்டிகளை வெல்வதற்கு சகல துறை ஆட்டக்காரர்களையே நம்பியிருப்பதாகக் கருத்துத் தெரிவித்த யுனிஸ்கான் அந்தப் போட்டியில் வேகப்பந்து வீச்சாளர் சொஹைப் அக்தர் இல்லாமல் போனமை எமக்குப் பாரிய பிரச்சினையாக இருக்கவில்லை என்றும் சுழற்பந்து வீச்சு கடினமான பணி என்றார்.

பாகிஸ்தானுடனான இரண்டாவது போட்டியான இறுதிப் பகுதியில் தனது வீரர்களின் திறமை பாராட்டும் படியாக இருந்ததாக பயிற்றுநர் பில் சிமன்ஸ் தெரிவித்தார்.

# இந்தியாவுக்கு வெற்றி வாய்ப்பு

### கங்குலி



அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் போட்டித் தொடரில் இந்தியாவுக்கு வெற்றி வாய்ப்பு அதிகமாகவுள்ளது என்று இந்திய அணித் தலைவர் சௌரவ் கங்குலி தெரிவித்தார்.

பி.பி.சி க்கு அளித்த பேட்டியில் அவர் கூறியதாவது; கடந்த சில மாதங்களில் நடைபெற்ற ஒருநாள் போட்டிகளில் இந்திய அணி சிறப்பாக விளையாடவில்லை. அதே நேரத்தில் உலக சம்பியனான அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இந்தியாவுக்கு மனோரீதியாக சாதகமான அம்சங்கள் உள்ளன.

தங்களுக்கு எதிராக மிகச் சிறப்பாக விளையாடக் கூடிய அணி இந்தியா என்பதை அவுஸ்திரேலியா உணர்ந்துள்ளது. உள்நாட்டில் சிறப்பாக விளையாடும் அணி என்ற பெயர் இந்தியாவுக்கு உள்ளது. இவையெல்லாம் நமக்கு சாதகமான அம்சங்களாகும்.

அதனால் இத்தொடரை வென்று விடுவோம் என்று இப்போதைக்கு கூறமாட்டேன். எதையும் தற்போதே ஊகிக்க முடியாது. ஆனால் மிகவும் கடுமையான போட்டியாக இத் தொடர் விளங்கும் என்ற உறுதியை அளிக்கிறேன்.

அவுஸ்திரேலியா, நமது வீரர்களிடையே உள்ள திறமையை வெளிக்கொணர்ந்துள்ளது. அது மீண்டும் நடைபெறும் என்று எதிர்பார்க்கிறேன் என்றார் கங்குலி.

## பங்களாதேஷிற்கு எதிரான ஒருநாள் போட்டி நியூசிலாந்து அணித் தலைவராக விக்டோரி

எதிர்வரும் நவம்பரில் பங்களாதேஷ் செல்லும் நியூசிலாந்து அணியின் ஒரு நாள் போட்டிகளுக்கு டேனியல் விக்டோரி தலைமைப் பொறுப்பை ஏற்பார் எனத் தெரிய வருகிறது.

கடந்த நவம்பர் மாதம் முதல் வயிற்றில் நோவுடன் விளையாடிவரும் அணித் தலைவர் ஸ்ரீபன் பிளமிங் பங்களாதேஷிற்கு எதிரான இரு டெஸ்ட் போட்டிகளின் பின்னர் சிகிச்சை பெறவும் ஓய்விலிருக்கவும் உத்தேசித்து உள்ளதே விக்டோரி தலைமையேற்பதற்கான காரணம் எனக் கூறப்படுகிறது. எனினும் பிளமிங் இங்கிலாந்து கவுன்டி அணிக்கு தலைமை தாங்கவிருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. எனினும் இவருக்குப் பின்னர் ஜேக்கப் ஓரம், கிரேக் மெக்மிலன், கிறிஸ்கெயான்ஸ் ஆகியோரின் பெயர்களும் அடிபடுவதாகவும் கூடுதலாக விக்டோரிக்கே வாய்ப்பு அதிகமிருப்பதாக முன்னாள் பயிற்றுநர் டேவிட் றிஸ்ட் தெரிவித்துள்ளார்.

# அதிக கோல் அடித்த உலக சாதனையை பாக்கின் சோகைல் அப்பாஸ் சமன் செய்தார்



அதிக கோல் அடித்த உலக சாதனையை சமன் செய்தார் பாகிஸ்தானின் சோகைல் அப்பாஸ்.


இந்தியாவுடனான புதுடில்லியில் திங்கட்கிழமை நடைபெற்ற 5 ஆவது போட்டியில் இரண்டு கோல்களை அடித்ததன் மூலம் உலக சாதனையை அவர் சமன் செய்தார். இதன் மூலம் தற்போது 267 கோல்களை அடித்து நெதர்லாந்தின் பால்லிட்ஜென்ஸின் சாதனையை அவர் சமன் செய்துள்ளார்.

இப்போட்டியிலேயே உலக சாதனையை முறியடிக்க அவருக்கு வாய்ப்புகள் கிடைத்தன. ஆனால் இந்திய கோல்-கீப்பர் ஆட்ரின் டிசௌசா மிகச் சிறப்பாக தடுத்து நிறுத்தி அந்த வாய்ப்பை ஒத்தி போட்டார். இந்தியாவுடனான இத் தொடரில் நடைபெற்ற 5 ஆட்டங்களில் இதுவரை 7 கோல்களை போட்டுள்ளார் அப்பாஸ்.

லிட்ஜென்ஸின் சாதனையை நான் சமன் செய்திருக்கலாம். ஆனால் அவருடன் என்னை ஒப்பிடக் கூடாது. நான் இன்னும் கற்றுக் கொண்டிருக்கிறேன் என்று போட்டிக்குப் பிறகு அப்பாஸ் தெரிவித்தா.

29 வயதாகும் அப்பாஸ், 1998 ஆம் ஆண்டில்தான் சர்வதேசப் போட்டிகளில் அறிமுகமானார். ஒரே ஆண்டில் 60 கோல்களை அடித்த வீரர், மிக விரைவாக 100 கோல்கள், 200 கோல்கள் அடித்த வீரர் என்ற பெருமையை ஏற்கனவே பெற்றுள்ளார். இதுவரை 210 போட்டிகளில் விளையாடியுள்ள அப்பாஸ், பெனால்டி கோணர் நிபுணர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இங்கிலாந்து றக்பி அணியின் புதிய தலைவராக வில்கின்சன்



நியுகாஸ்ல் நட்சத்திர றக்பி வீரரான ஜொனிவில்கின்சன் இங்கிலாந்து றக்பி அணித் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். 25 வயதான இவர் கடந்த ஆகஸ்டில் ஓய்வு பெறும் லோறன்ஸ் டலக்லியோவிடமிருந்து பதவிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

கடந்த றக்பி உலக கிண்ணப் போட்டிகளில் அவர் அவுஸ்திரேலியாவுக்கெதிரான போட்டியில் வெற்றி கோலை அடித்தார். அவர் 52 போட்டிகளில் பங்குபற்றி 817 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.

வில்கின்சன் 1998ஆம் ஆண்டு சர்வதேச போட்டிகளில் பிரவேசித்தவராவார்.

## புதுக்குடியிருப்பு பிரதேச அணிக்கு முதலிடம்

மாவீரர்களான குமரப்பா, புலேந்திரன் உட்பட பன்னிரு வேங்கைகள் நினைவாக மின்னொளியிலான கைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி ஒன்று முல்லைத்தீவு மகாவித்தியாலய மைதானத்தில் நேற்று முன் தினம் நடைபெற்றது.

முல்லை மாவட்ட தமிழீழ விளையாட்டுத் துறையினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இச்சுற்றுப் போட்டியில் முல்லை மாவட்டத்தைச் சேர்ந்த ஐந்து பிரதேச செயலகத்தைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட அணிகள் கலந்து கொண்டன.

இதில் முதலாம் இடத்தைப் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவு அணியும், இரண்டாம் இடத்தை கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவு அணியும் பெற்றுக் கொண்டன.

இப்போட்டியின் பிரதம நடுவராக கரைதுறைப்பற்று பிரதேச விளையாட்டு அதிகாரி குமார் கடமையாற்றினார்.(20)

## சிந்தனைக்கு



அனைத்துத்தமிழ் மக்களும் ஒரே இனம் என்ற தேசாபிமான உணர்வுடன் போராட்டத்தில் பங்கு கொண்டால், எமது விடுதலை இலட்சியம் வெற்றி பெறுவது நிச்சயம்.

**தமிழீழ தேசியத் தலைவர்.**


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ்.சாலை,கிளிநொச்சி. 06-10-2004

தொலைபேசி 060-2213244

தொலைநகல் 021-2283948

மின் அஞ்சல் Daily@ eezhanatham. com


## மீண்டும் திரும்புதல்!

பேச்சுவார்த்தைக்குத் திரும்புமாறு விடுதலைப்புலிகளை ஊக்குவிக்க அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு அரசாங்கம் திடசங்கற்பம் பூண்டுள்ளது என முதலாவது சமாதான ஆலோசனைச் சபைக் கூட்டத்தில் சனாதிபதி சந்திரிகா தெரிவித்தமை ஒன்றும் புதிதல்ல. ஏனெனில் அவர் இவ்வாறு கூறுவது முதற் தடவையல்ல. முக்கிய நிகழ்வுகளில், ஊடகங்களுக்கான பேட்டிகளில் மற்றும் நாட்டு மக்களுக்கான உரை என்பனவற்றில் இவ்வாறு அவர் கூறிச்கொள்வது வழமையே.

ஆனால் இது பலருக்கும் விளங்காததொன்றாகவே உள்ளது. ஏனெனில் விடுதலைப்புலிகள் இயக்கம் சமாதானப் பேச்சுவார்த்தை மேசைக்கு வருவதற்காக எத்தகைய நடவடிக்கைகளையும் திடசங்கற்பத்துடன் கூடிய துணிவான நடவடிக்கைகள் எதனையும் சனாதிபதி சந்திரிகாவோ அன்றி வேறு எவருமோ எடுக்க வேண்டிய தேவையில்லை.

ஏனெனில் விடுதலைப்புலிகள் இயக்கம் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு எப்பொழுதும் தயாராகவேயுள்ளது. இதனைப் பலதடவை உறுதிசெய்துள்ளது. அத்தோடு, புலிகள் மீண்டும் பேச்சுவார்த்தைக்குத் திரும்புதல் என்பது தவறானது. இடைநிறுத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளைத் தொடங்குதல் என்பதே சரியானதாகும். அதுவே விடுதலைப்புலிகள் கோருவதும் ஆகும்.

விடுதலைப்புலிகள் இயக்கம் பேச்சுவார்த்தைகள் இடைநிறுத்தப்பட்ட இடத்தில் இருந்து-விட்ட இடத்தில் இருந்து-ஆரம்பிப்பதற்கு எப்பொழுதுமே தயாராகவே உள்ளது. ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் இணக்கம் தெரிவித்த இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை தொடர்பாகப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான சம்மதத்தினை அவர்கள் பலதடவை ஏற்பாட்டாளரிடம் வெளிப்படுத்திவிட்டனர்.

மேலும், சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கான நோர்வேத் தரப்பின் அனுசரணை நீடிக்கவும், அதற்கு ஒத்துழைக்கவும் விடுதலைப்புலிகள் இயக்கம் உளப்பூர்வமான சம்மதத்துடனேயே உள்ளது. அதாவது நோர்வேத் தரப்பின் முயற்சிகளுக்குக் குந்தகம் விளைவிக்காது, யுத்தநிறுத்தத்திற்கு இடையூறு செய்யாது பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கப் புலிகள் தயாராகவே உள்ளனர்.

ஆனால், சனாதிபதி சந்திரிகாவோ விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தைக்குத் திரும்புதல் என களநிலைமைக்கும், யதார்த்தத்திற்கும் மாறாகப் பேசுகின்றார். ஆனால் உண்மையில் பேச்சுவார்த்தையில் இருந்து திரும்பிப் பழைய இடத்திற்குச் சென்றவர்களும், விட்ட இடத்தில் இருந்து பேச்சுவார்த்தைக்குத் திரும்பி வர மறுப்பவர்களும், சனாதிபதி சந்திரிகாவும் அவரது சகபாடிகளுமேயாகும்.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க யுத்தகாலத்திலும் சரி, சமாதான காலத்திலும் சரி, நேரம் ஒன்று பேசுபவர், முரண்பாடான தத்துவங்களைக் கூறுபவர், சமாதானத்திற்கான யுத்தம், என்பது போன்ற சித்தாந்தங்களை வெளிப்படுத்துபவர். இதேபோன்றே தற்பொழுது புலிகளைப் பேச்சுவார்த்தைக்குத் திரும்பச்செய்தல் என்பதுமாகும்.

சனாதிபதி சந்திரிகா மீண்டும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு எத்தகைய அர்ப்பணிப்பையும் செய்தல் வேண்டாம். இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை தொடர்பில் பேச்சுக்களை ஆரம்பிக்கலாம் என்ற முடிவை அறிவிப்புச் செய்தாலே போதுமானதாகும். இது அரசாங்கத்தின் மீதான நிர்பந்தமல்ல. விட்ட இடத்தில் இருந்து பேச்சுக்களை ஆரம்பிக்கத் தெரிவிக்கும் சம்மதமாகும்.

அத்தோடு, இது ஒன்றும் மக்கள் விரோத நடவடிக்கையும் அல்ல. மக்கள் எதிர்க்கும் செயலும் அல்ல. கடந்த ஐ.தே.முன்னணி அரசாங்கம் மீளவும் பேச்சுவார்த்தையைத் தொடங்குவதற்குத் தயாரானபோது மக்கள் அதற்கு எதிர்ப்புக் காட்டவில்லை. சனாதிபதி சந்திரிகாவும் பாதுகாப்பு நிலவரத்தைக் காரணம்காட்டி அரசாங்கத்தைக் கலைத்தாரே ஒழிய இடைக்காலத் தன்னாட்சி நிர்வாகசபை குறித்த பேச்சுக்களை முதன்மைப்படுத்தி அதற்கு எதிரான செயற்பாடாக ஆட்சியைக் கலைக்கவில்லை.

ஆனால் தற்பொழுது சனாதிபதி சந்திரிகாவோ, அவரது அரசாங்கமோ விட்ட இடத்தில் இருந்துபேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்காது தொடக்கப்புள்ளியில் போய்நிற்கின்றது. அதுவும் பேச்சுவார்த்தைகளுக்கான சிற்சில நிபந்தனைகளுடன். இதன் பிரகாரம் பேச்சுவார்த்தை மீள ஆரம்பிக்கப்பட வேண்டுமானால் அரசாங்கத்தரப்பு சமாதானப் பேச்சுவார்த்தைக்குத் திரும்பிவர வேண்டியுள்ளது.

அதாவது, சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு விடுதலைப்புலிகள் திரும்பிவருதல் வேண்டும் என்பதல்ல. சனாதிபதி சந்திரிகாவும் அவரது அரசாங்கமுமே விட்டுச்சென்ற இடத்திற்குத் திரும்பிவருதல் வேண்டியுள்ளது. ஆகையினால் புலிகளைத் திரும்ப அழைத்தல் என்பதற்குத் திடசங்கற்பமும், துணிவும் தேவையில்லை. பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க ஆட்சியாளர்களுக்கே- குறிப்பாகச் சனாதிபதி சந்திரிகாவிற்கே திடசங்கற்பமும் அர்ப்பணிப்பும் தேவை. ஏனெனில் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டால் ஆட்சி அதிகாரம் கைவிட்டுப் போகலாம் என அஞ்சுபவர் அவரே.

# அத்துமீறி நுழைந்து மீன்பிடித்த 5 இந்திய படகோட்டிகளுக்கு விளக்கமறியல்

ஐந்து இந்தியப் படகோட்டிகள் மன்னார் நீதவானால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இது பற்றி மேலும் தெரிய வருவதாவது!

தலைமன்னாருக்கு மேற்கே இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன் பிடித்த ஏழு படகுகளில் இருந்த 28 மீனவர்களை நேற்று முன்தினம் பிற்பகல் சிறிலங்கா கடற்படையினர் கைது செய்தனர்.

இவர்களை கரைக்கு அழைத்து வந்த கடற்படையினர் பின்னர் இரண்டு படகுகளையும், எட்டு மீனவர்களையும் விடுவித்து ஏனையோரை தலைமன்னார் பொலிசாரிடம் நேற்றுக் காலை ஒப்படைத்தனர். பிற்பகல் இந்த இருபது பேரும் மன்னனர் நீதவான் அப்துல்லா முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்டனர்.

இவர்களில் ஐந்து படகோட்டிகளை இம் மாதம் 19ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதவான் ஏனைய 15 பேரையும் இந்தியாவிற்கு திருப்பி அனுப்புவதற்காக கடற்படையினரிடம் ஒப்படைக்குமாறு பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

# சச்சு மாஸ்டர் கொலைச் சந்தேக நபர் நேற்றும் ஆஜர்படுத்தப்படவில்லை

மட்டக்களப்பு சிறைச்சாலையில் கருணா குழுவைச் சேர்ந்த சச்சு மாஸ்டர் உட்பட இருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்புடைய சந்தேக நபரான சிறைக் கைதியான மகேந்திரன் புவிதரன்நேற்று 4 ஆவது தடவையாகவும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவில்லை.

பாதுகாப்பின் நிமித்தம் பதுளை சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ள முதலாவது சந்தேக நபரான மகேந்திரன் புவிதரன் என்பவரை அங்கிருந்து அழைத்து வருவதில் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகள் இருப்பதாக மட்டக்களப்பு சிறைச்சாலை அத்தியட்சகர் நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பித்தார். மட்டக்களப்பு சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ள இரண்டாவது சந்தேக நபர் மட்டும் ஆஜர்படுத்தப்பட்டார். இதனையடுத்து குறிப்பிட்ட இரண்டு சந்தேக நபர்கள் மீதான விளக்கமறியலை நீதவான் நீதிமன்ற நீதிபதி எம்.எச்.எம்.அஜ்மீர் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை நீடித்தார். அதேவேளை, கடந்த வருடம் யூலை மாதம் 14 ஆம் திகதி மட்டக்களப்பு கல்லடி பாலத்தில் ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்டதாகக்கூறப்பட்டு விளக்கமறியலில் வைக் கப்பட்டுள்ள 4 பெண்கள் உட்பட 8 விடுதலைப் புலிப் போராளி களின் விளக்கமறியலும் எதிர்வரும 19 ஆம் திகதி வரை மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

# அம்பாறை கொலைகள் தொடர்பான முஸ்லிம் சந்தேக நபர் கைது

அம்பாறை மாவட்டம் கல்முனைக்குடி மற்றும் சாய்ந்தமருது ஆகிய முஸ்லிம் பிரதேசங்களில் இடம்பெற்ற ஆட்கொலைச் சம்பவங்கள் தொடர்பாக தேடப்பட்டு வந்த சூத்திரதாரியை கல்முனை பொலிசார் கைது செய்துள்ளார்கள்.

சம்மாந்துறையைச் சேர்ந்த சுலைமை லெப்பை சலீம் என்பவரே இந்த சூத்திரதாரியாவார். கல்முனைக்குடி மற்றும் சாய்ந்தமருது பிரதேசங்களில் அண்மைக் காலங்களில் ஒரு யுவதி உட்பட 4 முஸ்லிம்கள் இனந் தெரியாத ஆயுத பாணிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்த ஆட்கொலைச் சம்பவங்கள் தொடர்பாக பொலிசாருக்கு கிடைத்த தகவலையடுத்து கடந்த மாதம் 14 ஆம் திகதி சம்மாந்துறையிலுள்ள குறிப்பிட்ட நபருடைய வீடு பொலிசாரினால் முற்றுகையிடப்பட்ட போதிலும் அவர் தப்பிச் சென்று விட்டார். இவரது வீட்டிலிருந்து ரி-56 ரக துப்பாக்கியொன்றும், உள்ளூர் தயாரிப்பான கைத்துப்பாக்கியொன்றும் பொலிசாரினால் கைப்பற்றப்பட்டு, இவருடைய மனைவி அப்துல் நஜீமா என்பவரும் கைது செய்யப்பட்டு மட்டக்களப்பு சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்கள். தலைமறைவாகியிருந்த இவரை கல்முனை பொலிசார் நேற்று முன்தினம்கைது செய்து கல்முனை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது, மேலதிக நீதிபதி எம்.மொகிதீன் இந் நபரை எதிர்வரும் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

## சீனி, பருப்புக்கு வற்வரி நீக்கம்

சீனி மற்றும் பருப்பிற்கான பெறுமதி சேர் வரியான "வற்" வரியை நீக்கி உள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

இந்த வரி நீக்கம் நேற்று முன்தினம் முதல் அமுலுக்கு வரும் வகையில் நீக்கப்பட்டுள்ளதாக வர்த்தகப் பாவனையாளர்கள் அலுவல்கள் அமைச்சர் ஜெயராஜ் பெர்ணானாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் ஒருகிலோ பருப்பின் விலை ஐந்து முதல் ஆறு ரூபாவரை குறைவடையும் எனவும், சீனியின் விலை கிலோ ஒன்றிற்கு நான்கு ரூபா ஐம்பதுசதத்தால் குறைவடையும் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# சூதாட்டத்தில் ஈடுபடுவோரை கட்டுப்படுத்த நடவடிக்கை

அண்மைக்காலமாக வடமராட்சிப் பகுதியில் சூதாட்டத்தில் ஈடுபடும் கும்பல்களின் எண்ணிக்கை அதிகரித்துவருவதாகத் தெரியவருகின்றது. குறிப்பாக அல்வாய் மற்றும் துன்னாலைப்பகுதிகளில் இடம்பெற்று வருவதாகக் கூறப்படும் இச் சூதாட்டங்களில் பணமாக வைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் பல இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்களும், பணமும் கலாசாரத்தைப் பேணும் இளைஞர் குழுவினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

குறிப்பாக அல்வாய் முத்துமாரி அம்மன் கோவிலடிப்பகுதியில் அண்மையில் கலாசாரத்தைப் பேணும் இளைஞர் குழு நடாத்திய தேடுதல் ஒன்றின்போது சூதாட்டத்திற்குப் பயயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் மோட்டார் சைக்கிளொன்றும், ஒரு தொகுதி நகையுடன் பணமும் கைப்பற்றப்பட்டிருந்ததாகக் கூறப்படுகின்றது.

எனினும் சூதாட்டத்தில் ஈடுபடடிருந்த கும்பலைச் சேர்ந்த பலரும் தப்பித்து விட்ட போதிலும் 18வயதிற்கும் குறைவான வயதுடைய சிறுவர்கள் இருவர் பிடிபட்டிருந்தனர். சூதாட்டத்தில் ஈடுபட்டிருக்கும் கும்பல்கள் தாங்கள் சிக்கிக்கொள்வதைத் தவிர்ப்பதற்காக இச் சிறார்களை வேவு பார்க்கும் பணியில் ஈடுபடுத்தியிருந்ததாக விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

ஆயினும் குறித்த சிறுவர்களிருவரும் எச்சரிக்கப்பட்டு அவர்களது பெற்றோரிடம் கையளிக்கப்பட்டுவிட்ட நிலையில் சூதாட்டத்தில் ஈடுபடும் கும்பல்களை மட்டுப்படுத்தும் பணியில் கலாசாரத்தைப் பேணும் இளைஞர் குழு தற்போது முனைப்பாக ஈடுபட்டு வருவதாகக் கூறப்படுகிறது. (27)

## ஆண்டு –5 புலமைப்பரிசில் 500 ரூபாவாக அதிகரிப்பு

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பெறத் தகுதியுடையோருக்கான கொடுப்பனவு இரட்டிப்பாக்கப்படவுள்ளது.

அடுத்த ஆண்டு தொடக்கம் இந்த அதிகரிப்பு வழங்குவதற்கு கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது.

இக் கொடுப்பனவு வழங்களுக்கென 148.4 மில்லியன் ரூபாய்களை ஒதுக்கீடு செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளதாக கல்வியமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்று கூறுகின்து.தற்போது இருநூற்றைம்பது ரூபாவினை மாதாந்தம் கொடுப்பனவாக பெறும் ஒருவர் இனி வரும்காலங்களில் அதனை ஐநூறு ரூபாவாகப் பெறுவார் என ஆங்கில நாழிதல் செய்திஒன்று கூறுகின்றது.

# வடக்கு கிழக்கு உள்ளூராட்சித் தேர்தல் ஏப்ரல் மாதத்திற்கு ஒத்திவைப்பு

வடக்கு கிழக்குஉள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் ஐந்தாவதுமுறையாக ஒத்திவைக்கப்பட்டுள்ளன இதற்கான தீர்மானத்தை தேர்தல் ஆணையாளரும் தேர்தல் தெரிவத்தாட்சித் அலுவலகர்களும் மேற்கொண்டுள்ளனர்.பிரதேசத்தில் நிலவும் இயல்பற்ற நிலை காரணமாக இதற்கான வாய்ப்பு இல்லையென்பதால் குறிப்பிட்ட உள்ளூராட்சிசபைத் தேர்தல்களை நடத்த முடியாது என இந்த தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த தேர்தல் இந்த மாதம் 23ஆம்திகதி இடம்பெற ஏற்கனவே முடிவெடுக்கப்பட்டிருந்தது. தற்போதைய முடிவின் படி எதிர்வரும் ஏப்ரல் மாதம் 23ஆம் திகதிக்கு இந்த தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.(32)

**நாளை வெளிவரும்**

"ஆதவனின் அனுபவப் பகிர்வுகள் தொடர் தவிர்க்கமுடியாத காரணத்தால் இன்று வெளிவரவில்லை. நாளை இத் தொடர்பிரசுரமாகும் என்பதை அறியத் தருகின்றோம்.

# மாணவர்களை அறிவுத் தேடலில் இட்டுச்செல்லும் பெருமைக்குரியவர்களாக ஆசிரியர்கள் உள்ளனர்

## தமிழீழ மாணவரமைப்பின் செய்திக் குறிப்பில் புகழாரம்

உலகஆசியர்தினம் அக்டோபர்-6 தமிழ் மாணவர்களை காத்திரமான அறிவுத்தேடலில் இட்டுச்செல்லும் பெருமைக்குரியவர்களாக ஆசிரியர்கள் மதிக்கப்படுகின்றனர். எமது போரியல் வரலாற்றில் இடர்களையும், துன்பங்களையும் சுமந்து எமது மாணவர்களின் கல்வியில் அக்கறை கொண்டு உழைத்த ஆசிரியர்கள் கௌரவத்துக்குரியவர்களாக போற்றப்பட வேண்டும். யுத்த நெருக்கடியான காலகட்டத்திலும் இன்றைய சமாதான சூழ்நிலையிலும் பௌதீகவள பற்றாக் குறை,ஆசிரியர் வளப்பற்றாக்குறை போன்றவற்றின் மத்தியிலும் மாணவர்களின் கல்வியில் ஒவ்வொரு ஆசிரியர்களும்அர்ப்பணிப்புடன் செயற்பட்டதன் காரணமாக தமிழ் மாணவர்களின் கல்வியில் உயர்வு ஏற்பட்டமையினை இன்றைய நாளில் நாம் நன்றியுடன் நினைவு படுத்துகிறோம் என உலக ஆசிரியர் தினம் தொடர்பாக தமிழீழ மாணவரமைப்பு வெளியிட்ட செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா அரசின் திட்டமிட்ட தடைகளுக்கு மத்தியிலும் போரும், கல்வியும் இணைந்த ஒருவாழ்வு இன்றைய வரலாற்றுத்தேவையாக உள்ளது என்ற தேசியத்தலைவரின் சிந்தனைக்கு அமைவாக போருக்காக கல்வியையும்,கல்விக்காக போரையும் வளர்த்தெடுத்த பெருமைக்குரியவர்களாக நோக்கப் படவேண்டியவர்களாக ஆசிரியர்கள் உள்ளனர்.

சிறிலங்கா அரசு திட்டமிட்ட ரீதியில் தமிழ் மாணவர்களின் கல்வியில் தரப்படுத்துதல், புறக் கணிப்பு போன்றவற்றை மேற்கொண்டு தமிழரின் கல்விச்சொத்தை அழிக்கமுற்படுகின்ற வேளையில் எமது விடுதலையை விரைவுபடுத்தி தமிழர்களின் கல்விக்கு காத்திரமான அடித்தளமிட ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடனும், உணர்வுடனும் செயற்படுவார்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு. மாணவர்களை அறிவுடன் ஆளுமையுடைவர்களாக, பண்புள்ளவர்களாக மலரப்போகும் எம் தேசத்தின் சிற்பிகளாக வளர்த்தெடுக்கின்ற வராற்றுக் கடமையினை தாங்கி நிற்கும் உத்தமர்களான ஆசிரியர்களை மாணவர்களின் சார்பில் கௌரவப்படுத்துவதையிட்டு மனநிறைவு அடைகிறோம் என மேலும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



நேற்று ஜெனீவாவில் அரசியல்துறைப் பொறுப்பாளர் அவர்கள் மனித உரிமைகள் குழுப் பிரதிநிதிகளைச் சந்திக்கையில்....

# தமிழ் மொழி எழுத்தாக்கத்திறன் தேர்வு முடிவுகள் வெளிவந்தன

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை வடகிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து ஆசிரியர்களிடையே நடத்திய தமிழ் மொழி எழுத்தாக்கத் திறன் தேர்வு முடிவுகள் வெளிவந்துள்ளன.

உலக ஆசிரியர் நாளையொட்டி நடத்தப்பட்ட மேற்படி தேர்வில் தேசிய மட்டத்தில் முதல் 5 இடங்களையும் பெற்றவர்களுக்கு வெற்றிப் பதக்கம், பாராட்டுச் சான்றிதழ் என்பவற்றோடு 5 ஆயிரம் ரூபா பணப் பரிசும் வழங்கப்பட இருக்கின்றன.

வலய மட்டங்களில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற அனைவருக்கும் சான்றிதழ்களும், ஆயிரம் ரூபா பணப் பரிசும் வழங்கப்பட இருக்கின்றன. இதற்கு 74 பேர் தெரிவாகியுள்ளனர்.

இப்பரிசுகளை தமிழ் வளர்ச்சிக்கழகம் வழங்குகிறது.

தமிழ் மொழி எழுத்தாக்கத் திறன் தேர்வு தேசிய மட்டத்தில் பரிசு பெறுவோர் விபரம் வருமாறு,

| வலயம் | பெயர் | நிலை |
|---|---|---|
| பட்டிருப்பு | திருமதி. க.சிவஞானம் மட்/கோட்டைக் கல்லாறு ம.வி. | 01 |
| பதுளை | மு.இந்திரகுமார் ப/பதுளை சரஸ்வதி க.வி. | 02 |
| மட்டக்களப்பு | திரு.எஸ்.சந்திரமோகன் மட்/கிரான்குளம் விநாயகர் ம.வி. | 03 |
| தென்மராட்சி | திருமதி வித்தியாதேவி மனோகரன் யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி | 04 |
| மடு | திரு. செ. ப. விமலதாஸ் மன்/கருங்கண்டல் றோ.க.த.ம.வி. | 04 |

## இராணுவத்தின் எலும்புக் கூடு மீட்பு

1996ஆம் ஆண்டு முல்லைத் தீவு முகாம் மீதான தாக்குதலில் பலியான இராணுவத்தினர் ஒருவரின் எலும்புக் கூடு நேற்று கட்டட இடிபாடுகளின் நடுவில் கண்டெடுக்கப்பட்டது.

இரு மாடிக்கட்டடச் சிதைவினை புனரமைத்துக் கொண்டு துப்புரவு செய்த வேளையிலேயே இவ் எலும்புக் கூடும், இராணுவச் சீருடையுடன் காணப் பட்டது.

உடனே இவ்விடத்திற்கு விரைந்த முல்லைத்தீவு காவல் பணிமனையினர் பார்வையிட்டு எலும்புகளை பணிமனைக்குக் கொண்டு சென்றனர். (20)

## லெப்...

தில் நடைபெறவுள்ளது.

விடுதலைப்புலிகளின் கடற் புலிகளின் ஆதரவில், இசைப் பிரியனின் இசையில், தர்மேந்திரா கலையகத்தினால் எம்.ரி.சொய்சின் என்ற கப்பலுடன் வீரச்சாவடைந்த கப்பல் கப்டன் நிர்மலன், சீவ் ஓவிசர்கதிர், 2ஆம் ஓவிசர் வீர மணி, 3ஆம் ஓவிசர் கன்னிய நாடன், றேடியோ ஓவிசர் கஜேந் திரன், சீவ் எஞ்சினியர் அன்புக் குமரன், 2ஆம் எஞ்சினியர் கடற் கரும்புலி வள்ளுவன், 3ஆம் எஞ்சினயர் கடற்கரும்புலி நிமால், எலக்ரிக் எஞ்சினியர் வீரநாதன், போஸன் கடற்கரும்புலி மனியரசன்,ஏபிள் சீமன் செழியன், ,நாட்டுப்பற்றாளர் மோகன் ஆகிய மாவீரர்களினதும்,

எம்.ரீ.கொய் என்ற கப்பலுடன் வீரச்சாவடைந்த கப்பல் கப்டன் கடற் கரும்புலி ரஞ்சன், சிலம்பரசன், சீவ் எஞ்சினியர் அம்பிகைவாணன், 2ஆம் ஓவிசர் சுடர்ணன், 3ஆம் ஓவிசர் மேகன், 2ஆம் எஞ்சினியர் தணிகை மாறன், 3ஆம் எஞ்சினியர் அமுதன், போஸன் நவநீதன் சிந்து ஏபிள் சீமன் ஏழில் கண்ணன், ஏபிள் சீமன், இளம் பருதி, கடைற் தூயவன், சீவ் ஓவிசர் இரும்பொறை ஆகிய மாவீரர்களினதும் நினைவுகளைத் தாங்கியதாக 'அலைபாடும் பரணி' இசை ஒலி நாடா உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தமிழர்...

ஏற்றிவைத்தனர்.

தமிழீழ தேசியக்கொடியை வடமராட்சிக் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இ.தயா ஏற்றி வைக்க, பன்னிரண்டு வேங்கைகளின் திருவுருவப்படங்களுக்கும் பெற்றோர்கள் மற்றும் சக போராளிகள் ஈகச்சுடரேற்றி மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

தொடர்ந்து நினைவுத்தூபிப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த விசேட மேடையில் நினைவுதினப் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

கிளிநொச்சியில் சந்திரன் பூங்காவின் மாவட்ட அரசியல்துறையினரின் ஒழுங்கமைப்பில் காலை 9.00 மணிக்கு நினைவுநாள் நிகழ்வு ஆரம்பமானது.

இதில் பொதுச்சுடரினை பெண்கள் புனர்வாழ்வுக்கழக இணைப்பாளர் சுவர்ணா, வெண்மைச்சங்கத் தலைவர் தங்கராசா ஆகியோர் ஏற்றி வைக்க, தமிழீழ தேசியக் கொடியை கிளி.மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் காண்டீபன் ஏற்றி வைத்தார்.

பன்னிரு வேங்கைகளின் திருவுருவப் படத்திற்கான மலர் மாலையினை கிளி மத்திய கல்லூரி ஆசிரியை விஜி அணிவித்தார். சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையினரின் தாக்குதல் தளபதிகளின் ஒருவரான அமிர்தாப் அவர்களின் நினைவுரை இடம்பெற்றது.

அக்கராயன் பிரதேசத்தில் கந்தபுரம் மாவீரர் மண்டபத்தில் பன்னிரு வேங்கைகளின் நினைவுநாள் நிகழ்வு கந்தபுரம் வலயப்பொறுப்பாளர் வண்ணத்தமிழ் தலைமையில் நடைபெற்றது.

மல்லாவிப் பிரதேச நிகழ்வு மல்லாவி மாவீரர் மண்டபத்தில் அரசியல்துறையைச் சேர்ந்த தனம் தலைமையில் நடைபெற்றது.

பொதுச் சுடரினை வர்த்தக சங்கத் தலைவர் தி.தர்மலிங்கம் ஏற்றிவைக்க, தேசியக்கொடியை துணுக்காய் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் செ.புனிதன் ஏற்றிவைத்தார்.

பாண்டியன்குளம் - துணுக்காய் அபிவிருத்திக் கழகப் பொறுப்பாளர் ஜீவ காருண்யம், துணுக்காய் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் புனிதன் ஆகியோரின் நினைவுரைகளுடன் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

பூநகரிப் பிரதேச நல்லூர் மகாவித்தியாலயத்தில் இடம்பெற்ற நிகழ்வில் வித்தியாலய அதிபர், பெரும்பாக உத்தியோகத்தர் மற்றும் போராளி போர்ப்பிரியன் ஆகியோரின் நினைவுரைகளுடன் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. முல்லை மாவட்ட நிகழ்வு முல்லைத் தீவில் அலங்கரிக்கப்பட்ட பந்தலில் வர்த்தக சங்கத் தலைவர் உதய குமார் தலைமையில் நடைபெற்றது.

பொதுச்சுடரினை பன்னிரு வேங்கைகளில் ஒருவரான கப்டன் ரகுவின் தந்தையார் இராசமாணிக்கம் ஏற்றி வைத்தார்.

திருவுருவப் படத்திற்கான ஈகச் சுடரினை கப்டன் ரகுவின் சகோதரன் மோகன் ஏற்றிவைத்தார். மலர் மாலையை மாவீரர்களின் பெற்றோர் அணிவித்தனர்.

முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க பொதுமுகாமையாளர் சிவலிங்கம், கடற்புலிகளின் முல்லைமாவட்டப் பொறுப்பாளர் மா.ரங்கன், முல்லை மகா வித்தியாலய ஆசிரியர் ஜெய வீரசிங்கம் ஆகியோரின் நினைவுரைகளும் இடம்பெற்றன.

(ச,15,24,20,34)

## சனாதிபதி...

ஆர்வமாக இருப்பதாக நோர்வே தரப்பினர் எங்களிடம் தெரிவித்தார்கள். வாயளவில், பேச்சளவில் மட்டும் இருக்காது செயளவில் சனாதிபதியும், அரசாங்கமும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்கின்ற எமது மக்களதும், எங்களுடைய அமைப்பினதும் எதிர்பார்ப்பை அவர்களுக்கு தெளிவாக விளக்கியுள்ளோம்.

ஏனெனில் பேச்சளவிலேயே சமாதானப் பேச்சுக்கள் முன்னெடுக்க வேண்டும்.என்கின்ற அறிக்கைகள் வெளியிடப்படுகின்றதே தவிர பேச்சுவார்த்தை மேசைக்கு வருவதற்கான ஆக்க பூர்வமான நடவடிக்கைகள் எதுவும் சனாதிபதியின் தரப்பிலிருந்தோ, அரசாங்கத் தரப்பிலிருந்தோ முன்னெடுக்கப்படவில்லை என்பதை நாங்கள் தெளிவாக அவர்களிடம் சுட்டிக்காட்டியுள்ளோம் என்றார்.

திருகோணமலையில் விடுதலைப்புலிகளினால் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஊர்காவல் படையினரை எவ்வித நிபந் தனைகளும் இன்றி விடுவிக்க வேண்டுமென போர் நிறுத்தக்கண் காணிப்புக்குழு கூறியுள்ளது.

அதாவது நீங்கள் அரசினால் தடுத்து வைத்துள்ள உங்கள் உறுப்பினர்களுடன் சம்பந்தப்படுத்தாமல் எவ்வித நிபந்தனைகளும் இன்றி இவர்களை விடுவிக்க வேண்டும் என்று கூறியுள்ளது. இதற்கு நீங்கள் என்ன சொல்லப்போகிறீர்கள் எனக்கேட்டபோது.

விடுதலைப்புலிகள் அமைப்பு கைது செய்து வைத்திருந்தால் அவர்களுடைய வேண்டுகோளை நாங்கள் ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் அவர்கள் யுத்தநிறுத்த உடன்படிக்கையை மீறி ஆயுதங்களுடன் எமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் ஊடுருவிய நிலையில் தான் காவல்துறைாயல் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்திலே அவர்கள் முன்நிறுத்தப்பட்டுள்ளார்கள். அந்த வகையில் சட்ட ரீதியான நடவடிக்கைகளை மேற்கொண்டுதான் அதற்கான நடவடிக்கைகளை எடுக்கலாம்.

நாங்கள் ஒரு ஆலோசனையைக் கொடுத்திருக்கின்றோம். இலங்கை அரசாங்கத்தின் சமாதானச் செயலகமும் எமது போராளிகளை விடுவிப்பது தொடர்பான சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுக்கின்ற பொழுது எங்களுடைய சமாதானச் செயலகமும் இதில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்து சட்டரீதியாக அவர்களை வெளியே எடுப்பதற்கான ஒத் துழைப்பைத் தருவதாக நாங்கள் அவர்களிடம் கூறியுள்ளோம். ஆனால் கண்காணிப்புக்குழு விடுத்த அறிக்கை சம்பந்தமாக எங்களுக்கு ஒன்றும் கிடைக்கவில்லை. இது சம்பந்தமாக எங்களுடைய நிலைப்பாடுகளை இன்றும தெளிவாக வெளிப்படுத்துவோம் என்று கூறினார்.

## சர்வதேச...

முன்பள்ளி ஆசிரியர்கள் கௌரவிப்பு பிரதேசரீதியாக நடைபெறவுள்ளது.

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தின் ஆசிரியர் தின நிகழ்வுகள் இன்று சந்திரன் பூங்காவில் இருந்து விருந்தினர்கள் அழைத்து வரப்பட்டு பண்பாட்டு மண்டபத்தில் நடைபெறும் என தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அறிவித்துள்ளது.

இன்று நடைபெறும் சர்வதேச ஆசிரியர் தினத்தையொட்டி நேற்று பாடசாலை ரீதியாக ஆசிரியர்கள் கௌரவிப்பு நிகழ்வு கிளி.மாவட்டத்தின் அனைத்துப் பாடசாலைகளிலும் நடைபெற்றது

கிளி-கோணாவில் அக்கராயன் அ.த.க. வித்தியாலயத்தில் மாணவி மு.இராஜிகா தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன.கிளி.மகா வித்தியாலயம், இந்துக்கல்லூரி, மத்திய கல்லூரி, புனித பற்றிமா றோ.க வித்தியாலயம், வட்டக்கச்சி மகாவித்தியாலயம், இராமநாதபுரம் ம.வி, இராமநாதபுரம் மேற்கு அ.த.க.,கல்மடுநகர் அ.த.க., கனகபுரம் ம.வி, புதுமுறிப்பு விக்கினேஸ்வரா உட்பட அனைத்து பாடசாலைகளிலும் ஆசிரியர்கள் சிறப்புச கௌரவிக்கப்பட்டு வாழ்த்தப்பட்டனர்.

இதேவேளை திருகோணமலையில் மூன்று இனங்களையும் சேர்ந்த முன்பள்ளி ஆசிரியர்கள் இன்று காலை மக்ஹெய்சர் விளையாட்டரங்கில் இருந்து ஊர்வலமாக அழைத்துவரப்பட்டு நியூ சில்வர்ஸ்ரார் ஹோட்டலில் வைத்து கௌரவிக்கப்படுவார்கள்.

(ச,சோ,லோ,12,25)

## ஐ.சி.ஆர்.சி....

பேணல் பற்றி கலந்துரையாடப்பட்டது. இதேவேளை, தாயகத்திலிருந்து சென்ற மனித உரிமைகள் அமைப்புப் பிரதிநிதிகளுக்கு, சர்வதேச மனித உரிமைகள் செயற்பாட்டாளரான ஹரிஜின் பயிற்சிப் பட்டறை ஒன்றை நடத்தினார். சுவிற்சர்லாந்தின் ஜெனீவாவில் உள்ள நோர்வே பணியகத்தில் இச் சந்திப்பு நடைபெற்றுள்ளது. இதேவேளை மனித உரிமைகள் குழு ஒன்றும் அரசியல்துறைப் பொறுப்பாளரைச் சந்தித்தது. மனித உரிமைகள் தொடர்பாக பேச்சுக்களை நடாத்தியது.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 06 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.